விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 234 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 24 வெள்ளிக்கிழமை (09.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# பொது வேட்பாளராக அரியநேந்திரன்

## சுயேட்சையாக களமிறங்குகிறார்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் களமிறங்கவுள்ளார். இவர் சுயேட்சையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## வரலாற்றுச் சிறப்புமிக்க

# நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 நாட் 15

## வவுனியாவில் காசோலை மோசடி

# பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ரூ.37 இலட்சம் பணம் செலுத்துக

## நீதிபதி இளஞ்செழியன் உத்தரவு

(வவுனியா)

வவுனியாவில் காசோலை மோசடி வழக்கில் ஆசிரியை ஒருவர் குற்றவாளி எனத் தீர்ப்பளித்த நீதிமன்றம் 37 இலட்சம் ரூபாய் 15

# அரசாங்க ஊழியர்களின் சம்பளம் நிறுத்தப்படலாம்

## அமைச்சர் பந்துல எச்சரிக்கை



(கொழும்பு)

ஐ.எம்.எப் உடனான உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டால் அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம் உள்ளிட்ட நலன்புரி நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டிய நிலை ஏற்படும் எனப் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன எச்சரித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவ சட்டமூலங்கள்

### சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

மருத்துவம் (திருத்தச்) சட்ட மூலங்கள் இரண்டு நேற்று பாராளுமன்றத்தில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன.

நேற்றுக் காலை 15

### ஜனாதிபதித் தேர்தல்

## 24 வேட்பாளர்கள் களத்தில்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக இதுவரை மொத்தம் 24 வேட்பாளர்கள் தமது கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளதாக இலங்கைத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 15

### யாழ்ப்பாணம், மட்டக்களப்பில்

## சமஷ்டியை வலியுறுத்தி துண்டுப் பிரசுரம் விநியோகம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் சமஷ்டியை வலியுறுத்தி துண்டுப்பிரசுரங்கள் விநியோகம் 15

## பிரிட்டனில் குடியேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்

### தமிழர்கள் தாக்கப்படலாம் என அச்சம்



(லண்டன்)

பிரித்தானியாவில் இனவெறித் தாக்குதல் தீவிரம் அடைந்துள்ள நிலையில், தமிழர்கள் 02

## வன்முறையுடன் தொடர்புடைய 21 வயதான மூவர் கைது

### பெற்றோல் குண்டுகள், வாள்கள் மோ.சைக்கிள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். 02

## தேர்தல் தொடர்பாக

### 91 முறைப்பாடுகள்

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறியமை 02

## இரண்டு மோட்டார் சைக்கிள் வவுனியாவில் திருட்டு

### மல்லாவி இளைஞன் கைது

(வவுனியா)

வவுனியாவில்இரண்டுமோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் மல்லாவி இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் நேற்றுத் தெரி 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலுள்ள அனைத்து வைத்தியசாலையிலும் அவசர சிகிக்சைப் பிரிவு ஸ்தாபிக்க வேண்டும்

## ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சைப் பிரிவு ஸ்தாபிக்கப்பட வேண்டும் என வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.


வடக்கு மாகாண சுகாதாரத்துறை தொடர்பான விசேட கலந்துரையாடல் மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் வடக்கு மாகாண சுகாதார நிர்வாக அதிகாரிகள் கலந்துக்கொண்டனர்.

மாகாண சுகாதாரத் துறையில் காணப்படும் சிக்கல்கள், மேற்கொள்ள வேண்டிய பொறிமுறை மாற்றம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சைப் பிரிவை ஸ்தாபிக்குமாறு மாகாண சுகாதார நிர்வாக அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த ஆளுநர் அந்தப் பிரிவிற்கான ஆளணியை நியமித்து உரிய பயிற்சிகளை வழங்குமாறும் ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் வைத்தியசாலைகளை ஒருங்கிணைப்பதற்கான தரவுப் பொறிமுறை ஒன்றை விரைவில் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார். சுகாதாரத் துறைக்கு தேவையான ஆளணி, வளப்பற்றாக்குறை, தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்குமாறு மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார். (ம-7)



யாழ். வண். கிழக்கு கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்மன் தேவஸ்தான கும்பாபிஷேக தின கிராம வலம் நேற்று நடைபெற்றது.

மின்விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பறந்தனில் கலை நிகழ்வுகள் சகிதம் மஹாமாரியம்மன் கிராம விஜயம் மேற்கொண்டு பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

## பிரிட்டனில்...

தாக்கப்படலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் பல பகுதிகளில் வன்முறைகள் வெடித்துள்ள நிலையில், சிறுபான்மையினத்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறுபான்மை இனத்தவர்கள் பலர் லண்டன், லீட்ஸ், Manchester, லிவர்பூல் போன்ற நகரங்களில் தாக்கப்பட்டுள்ளார்கள். கடைகள் சூறையாடப்பட்டுள்ளன,

லிவர்பூலில் நூலகம் கூட எரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழர்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் என பலரும் அச்சத்தில் உள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை சவுத்போர்ட்டில் கத்திக்குத்து தாக்குதலில் மூன்று பெண் குழந்தைகள் கொல்லப்பட்டதை அடுத்து நாட்டின் முக்கிய நகரங்களில் வன்முறை வெடித்தது.

தாக்குதல் மேற்கொண்ட சந்தேகநபர் இஸ்லாமிய புகலிடக் கோரிக்கையாளர் என்று பரவிய தவறான வதந்திகளைத் தொடர்ந்து வன்முறை வெடித்ததாக கூறப்படுகின்றது.

வெள்ளை நிறத்தவர்கள் அல்லாதவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது. கார்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான காணொளிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மன்னாரில் இளம் தாய் மரணம் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்

## சுகாதார அமைச்சர் ரமேஷ்



(மன்னார்)

மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம் தாய் சிந்துஜாவின் மரணம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

இந்த விடயத்தில் ஏதாவது தவறுகள் இடம்பெற்றிருந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற மருந்துவ திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்,

மன்னார் வைத்தியசாலையில் இடம்பெற்ற மரியராஜ் சிந்துஜாவின் மரணம் பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்த மரணம் குறித்து துரிதகரமான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதன்போது எழுந்து பதிலளித்த சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன,

இந்த விடயம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பான விசாரணை அறிக்கையை இது வரை ஆராயவில்லை. குறித்த விடயத்தில் ஏதாவது தவறுகள் நடந்திருந்தால் அது தொடர்பில் நிச்சயமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்போம்.

இதேவேளை நாட்டில் நோயாளர்களை பாதுகாப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காகவே புதிய சட்டமூலமொன்றையும் முன்வைத்துள்ளோம் என்றார்.(ம-7)

## அரச ...

பாராளுமன்றில் நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்டுள்ள கடன் உடன்படிக்கை காரணமாக நாட்டின் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்ய முடிந்துள்ளது.

அதன் பிரதிபலனாக இன்று நாட்டுக்கு தேவையான எரிபொருள், உரம் மருந்து உணவு ஆகியவை கையிருப்பில் உள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கூறுவது போல் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை ரத்து செய்தால் அடுத்த வருடம் வரவு செலவு திட்டத்தைக் கூட முன்வைக்க முடியாது.

அரசாங்க ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம் உட்பட நலன்புரி நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுவிடும்.

அது மட்டுமன்றி அந்த உடன்படிக்கையை இரத்து செய்ய நினைக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கு அந்த அரசாங்கத்தை இரண்டு வாரங்களுக்கு கூட முன்னெடுத்துச் செல்ல முடியாமல் போகும்.

எனவே சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாட்டில் சிறிதளவு மாற்றங்களை ஏற்படுத்தினாலும் நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையே உருவாகும் என்றார். (ம-7)

## வன்முறை...

சந்தேக நபர்களிடம் இருந்து 3 மோட்டார் சைக்கிள்கள், இரண்டு வாள், நான்கு பெற்றோல் குண்டுகள் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியில் உள்ள வீடுகள் மீது நடத்தப்பட்ட வன்முறை தாக்குதல் மற்றும் தீவைப்பு சம்பவங்கள் தொடர்பாகவே குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வெளிநாட்டில் உள்ள ஒருவர் இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு தப்பிச் சென்ற மற்றொருவர் மூலம் உள்நாட்டில் உள்ள நபர் ஒருவருக்கு பணத்தை வழங்கி குறித்த தாக்குதல்களை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளுக்கு பின்னர் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7.33)

## தேர்தல்...

தொடர்பாக இதுவரை 91 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் விதிமீறல்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக இதுவரை 91 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட தேர்தல் முறைப்பாடு முகாமைத்துவ நிலையத்திற்கு 46 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் குறித்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்தோடு, ஜனாதிபதி தேர்தலின்போது வாக்காளர் ஒருவரிடம் தேசிய அடையாள அட்டை இல்லாவிட்டால், அவர் சாரதி அனுமதிப் பத்திரம், ஓய்வூதிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு ஆகியவற்றை பயன்படுத்தலாம் எனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் தேர்தல் ஆணைக்குழுவால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டையை பெற்றுக்கொண்டு, அதனை பயன்படுத்தி வாக்களிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.


அதன்படி, வாக்காளர்கள் தமது பகுதிக்குரிய கிராம சேவகர்களை சந்தித்து, உரிய ஆவணங்களை பூர்த்தி செய்து, தற்காலிக அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது. (ம-7)

காணி தேவை
தொடர்புகளுக்கு:
077 374 4652
(234)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தசுவாமி கோவில் கொடிச்சீலை கையளிக்கும் நிகழ்வு





(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் கொடியேற்ற நிகழ்வுக்கு கொடிச்சீலை கையளிக்கும் நிகழ்வு நேற்று காலை நடைபெற்றது

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த பெருந்திருவிழா இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் மகோற்சவத் திருவிழா நடைபெறவுள்ளது.

கொடியேற்ற நிகழ்வுக்காகக் கொடிசீலை கையளிக்கும் நிகழ்வை முன்னிட்டு சட்டநாதர் கோவிலை அண்மித்துள்ள வேல்மடம் முருகன் கோவிலில் நேற்று காலை 9 மணிக்கு நடைபெற்ற விஷேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து தேரில் கொடிச்சீலை நல்லூர் ஆலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது. (நி-6-33)

# தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகும் கிராம அலுவலர்கள்

(கொழும்பு)

**தன்னிச்சையான கிராம அலுவலர்கள் சேவை யாப்பு வர்த்தமானிக்கு எதிர்ப்பு தெரிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக கிராம சேவகர்கள் தொழிற்சங்க கூட்டணி தெரிவித்துள்ளது.**

இதன்படி எதிர்வரும் திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளில் சேவை நடவடிக்கைகளில் இருந்து விலகுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சுதந்திர கிராம சேவை அலுவலகர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.கே.ஜி.ஜகத் சந்திரலால் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தமது தொழில்சார் நடவடிக்கையால் தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(நி-6)

# அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாது

## விவசாய திணைக்களம் தகவல்

(கொழும்பு)

நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாது என விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்முறை சிறுபோகத்தின் போது 2 மில்லியன் தொன் நெல் அறுவடை செய்யப்படும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

4 இலட்சத்து 80,000 ஹெக்டேயர் வயல் நிலப்பரப்பில் 77 சதவீதம் நாடு நெற்செய்கை பண்ணப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. 11 சதவீதம் சம்பா நெற்செய்கையும், 12 சதவீதம் கீரி சம்பா நெற்செய்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெரும்போக நெல் அறுவடையும் நாட்டில் இருப்பதால் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-6)

# வாஸ் குணவர்த்தனவிற்கு

## உறுதிப்படுத்தப்பட்டது மரணதண்டனை!

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டு பம்பலப்பிட்டி பிரதேசத்தில் வசித்து வந்த கோடீஸ்வர வர்த்தகரான மொஹமட் ஷியாம் என்பவரை கடத்திச் சென்று கொலை செய்த குற்றச்சாட்டில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன மற்றும் அவரது மகன் ரவிந்து குணவர்தன ஆகியோருக்கு நேற்று வியாழக்கிழமை மரண தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

வாஸ் குணவர்தன மற்றும் ஏனைய பிரதிவாதிகள் தம்மை அந்தத் தண்டனைகளில் இருந்து விடுவிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுக்களை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளதுடன் இந்த உத்தரவு உறுதி செய்யப்பட்டுள்ளது. (நி-6)

# வேட்பாளராக நாமல் நியமனம்; சஜித்திற்கான மறைமுக உதவி

## பிரசன்ன ரணதுங்க சாடல்



(கொழும்பு)

மக்களினதோ அல்லது கட்சியினதோ தேவைக்கு அமைய நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படவில்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ பெயரிடப்பட்டமை குறித்து அவர் இவ்வாறு தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கும், 2022 ஆம் ஆண்டு கலவரங்களுக்கும் நாமல் ராஜபக்ஷவும் பொறுப்புச் சொல்ல வேண்டுமென குற்றம் சுமத்தியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவை விடவும் அவரது புதல்வர் நாமல் ராஜபக்ஷ மீதே மக்களுக்கு அதிக கோபம் உள்ளது.

நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவது சஜித்திற்கு மறைமுகமாக உத வும் செயற்பாடாகும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## சம்பியனான டயமன்ட் அணி



அண்ணாசிலையடி அணியை வீழ்த்தி சம்பியனான டயமன்ட் அணி அமரர் நிக்கலஸ் எட்வேர்ட் ஞாபகார்த்தமாக வடமராட்சி உதைப் பந்தாட்ட சிரேஷ்ட சங்கம் நடத்திய 40 வயதிற்கு மேற் பட்டோருக்கான உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் 3 ஆம் இடத்திற்கான போட்டியும் இறுதிப் போட்டியும் கடந்த மாதம் 24ஆம் திகதி அல்வாய் நண்பர்கள் விளை யாட்டுக்கழகமைதானத் தில் மைதா னத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் டயமன்ட் அணியை எதிர்த்து அண்ணா சிலையடி இளைஞர் அணி மோதியது. இதில் டயமன்ட் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 2024ஆம் ஆண்டிற்கான சம்பியன் கிண்ணத்தை தன தாக்கிக் கொண்டது. அண்ணா சிலையடி இளைஞர் அணி 2 ஆம் இடத்தைப் பெற்றது.

இப்போட்டியில் டயமன்ட் அணி வீரர் ம. ராஜ்குமார் 2 கோல் களையும் அண்ணா சிலையடி வி.க. வீரர் இ. இலங்கேஸ்வரன் 1. கோலையும் அடித்தனர்.


மூன்றாம்ட இடத்திற்கான போட்டியில் வல்வை அணியை எதிர்த்து கொலின்ஸ் அணி விளை யாடியது இதில் வல்வை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டியில் டயமன்ட் அணி வீரர் ம.ராஜ்குமார் ஆட்ட நாயகன் மற்றும் தொடர் ஆட்ட நாயகன் ஆகிய விருதுகளையும் அண்ணா சிலையடி இளைஞர் அணி வீரர் சி. சத்தியேந்திரன் சிறந்த கோல்காப்பாளர் விருதை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(நி-6)

## வினேஷ் போகத் மருத்துவமனையில்

### கைநழுவிய தங்கம்



நீர்ச்சத்துக் குறைபாடு காரணமாக பாரீசில் உள்ள மருத்துவமனையில் இந்திய மல்யுத்த வீராங்கனையான வினேஷ் போகத் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒலிம்பிக் மல்யுத்தத்தில் இறுதிப்போட்டிக்கு முன்னேறி இந்தியாவுக்குப் பெருமை சேர்த்த வினேஷ் போகத், 100 கிராம் எடை கூடுதலாக உள்ள காரணத்தினால் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.


இரவு முழுவதும் உடல் எடையைக் குறைக்க தீவிர பயிற்சி மேற்கொண்ட காரணத்தினால் நீர்ச்சத்து குறைபாடு ஏற்பட்டு பாரீசில் உள்ள மருத்துவமனையில் வினேஷ் அனுமதிக்கப்பட்டுள்ளார்

இதன்காரணமாக இந்தியாவிற்கான பதக்கம் தற்போது பறிபோயுள்ளது. குறித்த சம்பவம் இந்திய ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தி யுள்ளது.

(நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3191

### கிருஷாந்தன்




### தனுஷியா




### விதுஷா




### தர்மினி




### அபிஷாந்




### வர்ஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலித்தீன் பாவனைக்கு எதிராக பாடசாலை மாணவர்கள் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு தாளையடி றோ.க.த.க பாடசாலையில் மாணவர்களால் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் பொலித்தீன் பாவனைக்கு எதிரான கவனயீர்ப்பு பேரணி ஒன்று நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

பேரணியை தொடர்ந்து பாடசாலை பிரதான வீதியின் இரு மருங்கிலும் உள்ள பொலித்தீன் மற்றும் உக்காத கழிவு பொருட்கள் மாணவர்களால் அகற்றப்பட்டது.

குறித்த பேரணியில் வடமராட்சி கிழக்கு பிரதேச பொது சுகாதார பரிசோதகர் நிருபனும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ( நி-6)

## சஜித் தலைமையிலான கூட்டணி அமோக வெற்றியீட்டும்

### தயாசிறி நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச தலைமையிலான கூட்டணி, அமோக வெற்றியீட்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

தயாசிறி ஜயசேகர தலைமையிலான கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே தயாசிறி ஜயசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை வீழ்ச்சி நிலைக்கு இட்டுச் சென்ற ஒருவர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளராக இருந்த அவர் பிற்காலத்தில் ஜனாதிபதியானார். ஒன்பதரை வருடங்கள் அவர் கட்சியின் தலைவராக இருந்தவர்.

இந்த ஒன்பது வருடத்தில் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளார்.


ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இன்று பல வழிகளில் வீழ்ச்சியடைந்துள்ளது. ஒரு சிலர் பலவந்தமாக கட்சியின் அதிகாரத்தை கையில் எடுத்துள்ளனர்.

ஆனால் கட்சியின் செயலாளர் நானே. எனவே எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதியன்று நாம் சஜித் பிரேமதாச தலைமையில் தேர்தலில் அமோக வெற்றியீட்டுவோம்.

அதன்பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மீண்டும் கட்டியெழுப்பப்படும். சஜித் பிரேமதாச தலைமையிலான கூட்டணியினருக்கு இந்த நாட்டை கட்டியெழுப்பக்கூடிய வல்லமை உள்ளது.

மக்கள் ஆணையுடன் இந்த நாட்டை வழிநடத்த தயாராக உள்ளோம் இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி-6)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்



### நல்லைக் கந்தவேளே!

வானிலும் மண்ணிலும் வருமண்டம் யாவிலும்
வளமுடன் கலந்ததிருவே!
ஞானமும் மோனமும் நற்றமிழ்க் கானமும்
நண்ணவே யெண்ணுங்குருவே!
நானென்று நீநின்று ஒளிவீச நாற்றிசையும்
நல்லூரன் கொடியு மேற
ஈனமதை யோட்டுவான் இன்னிசையை மீட்டுவான்
எழில்நல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர் நவ.பாலகோபால்.

### கொடியேற்றி நம் மக்களுக்கொரு தீர்வைப் பெற்றுத் தா வேலவா

நல்லைதனில் வீற்றிருந்து நல்லாட்சி புரியும்
வேலவா!
அடியவர்க்கு அருள் மழை பொழியும் ஆறுமுக
வேலவா!
அலங்காரக் கந்தனே அன்பு வடிவானவனே
வேலவா!
கொடியேற்றம் காண உன்தன் வாயில் வந்தோம்
வேலவா!
கொடியேற்றி நம் மக்களுக்கொரு தீர்வைப் பெற்றுத் தா
வேலவா!

நயினை விசு இராசநாயகம்.

## இராசிபலன்

09.08. 2024
ஆடி 24, வெள்ளிக்கிழமை
பஞ்சமி பின்னிரவு 1.31 மணிவரை
அத்தம் பின்னிரவு 1.58 மணிவரை

சுபநேரம் 6.04-7.34 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை
கருட பஞ்சமி, அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம் - அவிட்டம்
நல்லூர் கந்தன் கொடியேற்றம்

வளவன்




தொழில் வியாபாரத்தில் இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், உடல் நலன் சீராகும், உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்றெலாம்.




பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகள் கைகூடும், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.




தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப விரயங்கள் ஏற்படும் நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் மதிப்பும் மரியாதையும் கூடும்.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.




நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பொன்னான நாள், பெற்றோர் வழியில் எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும்.




நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழிலில் மேன்மையுண்டு, உற்சாகமான நாள்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாடு ஆனந்தம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கனவுப் பலிதமுண்டு, கௌரவமான நாள்.

கடவுள் சம்பளத்தை வாழ்க்கையின் முடிவில் தான் தருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையால் அறுவடை பாதிப்பு

(அக்கராயன்)

**திடீர் மழை காரணமாக உலர விட்டிருந்த நெற்கள் மழையில் நனைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.**



கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் தற்போது சிறுபோக நெற்செய்கை அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் போது மழை அடிக்கடி பெய்வதனால் விவசாயிகள் அறுவடையினை மேற்கொள்வதில் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

நெல்லினை உலர விடுவதில் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதுடன் தற்போது மழையும் பெய்வதன் காரணமாக வயல் வீதிகள் மிக மோசமாக சேதமடைந்து இருப்பதன் காரணமாக நெல் மூடைகளை எடுத்து வருவதில் நெருக்கடி காணப்படுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (நி-6-316-350)

# இணுவில் அறிவாலயத்தின் திருக்குறள் மாநாடும் கலை விழாவும்

(யாழ்ப்பாணம்)

இணுவில் அறிவாலயத்தின் "திருக்குறள் மாநாடும் கலை விழாவும்" நாளை 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை நிகழ்வுகள் 8.30 மணிக்கும் மாலை நிகழ்வுகள் 4.30 மணிக்கும் இணுவில் அறிவாலயத்தில் இடம்பெறும்.

இணுவில் அறிவாலயத்தின் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் தொடக்கவுரையை சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் ஆற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறும் பேருரைகளுக்கு வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி. அ.சண்முகதாஸ் தலைமை தாங்குவார். பேருரைகளை கலாநிதி.தி.செல்வமனோகரன், கலாநிதி.க.இரகுபரன், கலாநிதி.ச.முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

பேருரைகளைத் தொடர்ந்து "இல்வாழ்க்கை என்று திருவள்ளுவர் கூறும் கருத்தியல் சமகாலத்திற்கு பொருந்தக் கூடியது/பொருந்தாது" எனும் தலைப்பிலான பட்டிமன்றம் இணுவை தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்படவுள்ளது.

மாலை நிகழ்வுகளுக்கான தொடக்கவுரையினை யாழ். பல்கலைக்கழக முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா ஆற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து இசையரங்கு, நடனஆற்றுகை போன்ற கலைநிகழ்வுகளும் இடம் பெறும். (நி-6)

# முன்பள்ளி டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு


(யாழ்ப்பாணம்)

ஆறுதல் நிலையத்தினால் நடத்தப்பட்ட முன்பள்ளி கல்வி டிப்ளோமா பயிற்சியினை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அதன் தலைமை நிர்வாக அதிகாரி திருமதி.ஜெய தம்பையா தலைமையில் இடம்பெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து கொள்ளவுள்ளார்.


இந் நிகழ்வில் யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா தெற்கு வலயங்களைச் சேர்ந்த 330 ஆசிரியர்கள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# செம்மணி வளைவில் பறந்தது சேவற்கொடி



(யாழ்ப்பாணம்)

அலங்காரக் கந்தன் என போற்றப்படும் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ள நிலையில் நல்லூரான் செம்மணி வரவேற்பு வளைவில் சேவற்கொடி நாட்டும் நிகழ்வு நேற்று மதியம் சம்பிரதாய பூர்வமாக இடம் பெற்றது. (நி-6)



யா/ அனலைதீவு தெற்கு அ.த.க வித்தியாலயத்தின் விளையாட்டு நிகழ்வு கடந்த 1 ஆம் திகதி பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் பா.பகீர்பரன் தலைமையில் நடைபெற்றது.

# ஏலம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் 2024 ஆம் ஆண்டு கேள்வி கோரலில் சித்திபெறாத இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், பல்பொருள் வாணிபக் கடைகள், ஆரிய குளம் படகோட்டல் மற்றும் நீர் விளையாட்டுக்கள், சந்தை, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் போன்றவை எதிர்வரும் 14.08.2024, 15.08.2024 ஆம் திகதிகளில் ஏலம் கோரப்படவுள்ளன.

ஏலம் கோரப்படவுள்ளவற்றின் விபரம் ஏலம் கோரும் இடம், ஏலம் கோரப்படும் நேரம் என்பவற்றை நானா வித இறைவரிப்பகுதி விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என யாழ். மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு-2024 இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 6.45 மணிக்கு சிவபூமி அறக்கட்டளை மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆசியுரையுடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 6.55 மணி தொடக்கம் 8.05 மணி வரை மங்கள இசையினை நாதஸ்வரம்-செந்தில்நாதன் சபரீசன், பாலமுருகன் சரண்யன், தவில்-பிரபாவேந்துஷன், செந்தில்நாதன் பிருத்விகன் நிகழ்த்தவுள்ளனர். (நி-6)

# வேலணை முத்துமாரியம்மன் கொடியேற்றம் நாளை

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரெண்டு தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை கொடியிறக்க வைபவ நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (நி-6)

# ஊழியர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஓய்வு பெற்ற ஊழியர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்க பொது அறையில் அதன் தலைவர் க.நாகஜெயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தபால்மூல வாக்களிப்பு

# விண்ணப்பங்களை ஏற்கும் கால அவகாசம் நிறைவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் அஞ்சல்மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான, கால அவகாசம் இன்று நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளது.

இதேவேளை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் இதுவரை 22 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 11 வேட்பாளர்களும் வேறு அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 1 வேட்பாளரும், சுயேட்சையாக போட்டியிட 10 வேட்பாளர்களும் இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், அதற்காக கட்டுப்பணம் செலுத்துவதற்கான கால அவகாசமும் எதிர்வரும் 14ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# வீட்டின் கூரை மீது பாய்ந்த கார்



(கொழும்பு)

மொரவக்க - அலபதெனிய பிரதேசத்தில் காரொன்று வீதியை விட்டு விலகி வீடொன்றின் கூரை மீது விழுந்து விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த பெண் காயமடைந்துள்ளதாக மொரவக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெலுவயிலிருந்து மொரவக்க நோக்கி சென்றுகொண்டிருந்த கார் வீதியை விட்டு விலகி சுமார் 25 அடி பாய்ந்து வீடொன்றின் கூரை மீது விழுந்துள்ளது.

கார் விழுந்ததில் அவ் வீட்டின் கூரையும் சேதமடைந்துள்ளது. (நி-6)

# இலங்கை தொலைக்காட்சியின் முதல் செய்தி வாசிப்பாளர் காலமானார்

(கொழும்பு)

நீண்ட நாட்களாக உடல்நல குறைவால் பாதிக்கப்பட்டிருந்த இலங்கையின் முதல் தொலைக்காட்சி செய்தி தொகுப்பாளரான சிரேஷ்ட ஊடகவியலாளர் சுமனா நெல்லம்பிட்டிய தனது 80 ஆவது வயதில் காலமானார்.

தனது ஊடக வாழ்க்கையை ஆரம்பிக்கும் முன்னர் விமானப்படை அதிகாரியாக சுமனா நெல்லம்பிட்டிய கடமையாற்றியிருந்தார்.

சுமனா நெல்லம்பிட்டிய 1962 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி வானொலி நிலையத்தில் உதவி அறிவிப்பாளராக இணைந்து கொண்டார்.





இலங்கைத் தொலைக்காட்சி வரலாற்றில் முதல் பெண் செய்தி வாசிப்பாளர் சுமனா நெல்லம்பிட்டிய ஆவார்.

அந்த நேரத்தில் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி மற்றும் தேசிய தொலைக் காட்சியில் முதல் செய்தி தொகுப்பாளராகவும் பணியாற்றியிருந்தார்.

இந்நிலையில் அவரின் மறைவிற்கு பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர். (நி-6)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாடு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

00919566156719

WESTERN UNION MoneyGram Ria

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

077 839 3974


# ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் மேலதிக கொடுப்பனவு

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

நாட்டில் மேலைத்தேய வைத்தியர்களுக்கு மாத்திரம் வழங்கப்படுகின்ற மேலதிக சேவை கொடுப்பனவை அரச ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி இதனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, 18 ஆண்டுகளுக்கும் மேலாக, ஆயுர்வேத மருத்துவர்கள் பல சந்தர்ப்பங்களில் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தனர். எனவே அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற அனுமதி அளித்தமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசேட நன்றியைத் தெரிவிக்க வேண்டும். இந்தக் கொடுப்பனவானது நிதி அமைச்சுக்கு சுமையாக இல்லாமல் இருப்பதற்காக சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் வழங்கப்படும். இது அரசாங்கத்தின் ஆயுர்வேத வைத்தியர்களுக்குக் கிடைத்த வெற்றி என குறிப்பிடலாம்.

மேலும் கடந்த ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் பாரம்பரிய வைத்தியர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1982-இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>கி.பா:24 3/4<br>உயரம் : 5'4"<br>தகைமை/ தொழில்:A/L, London (கடை)<br>எதிர்பார்ப்பு:நற்குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B/14706 | பிறப்பு-1988-இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>கி.பா-56<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: A/L, தையல்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14709 |
| பிறப்பு:1988-இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா:52 2 இல் செவ்<br>உயரம் :5'4"<br>தகைமை/தொழில்:Degree, Teacher<br>எதிர்பார்ப்பு:நற்குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B/14707 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா:17<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்:Bsc, Teaching (temporary)<br>எதிர்பார்ப்பு: படித்த வெளிநாட்டு மணமகன்<br>தொ.இ: B/14712 |
| பிறப்பு:1992- இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>உயரம் :6'3"<br>தகைமை/தொழில்: College (Canada) Supervisor(Canada)<br>எதிர்பார்ப் பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14710 | பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>கி.பா:-14 10 இல் செவ்<br>உயரம் : 5'2"<br>தகைமை/ தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:குணமான மணமகன்<br>தொ.இ: B/14716 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



# மணிவிழா வாழ்த்து

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் பணியாற்றி இன்று 09.08.2024 மணிவிழாக்காணும்

திருமதி. நளினி ரவீந்திரன் (பிரதி அதிபர்)

SLTS-I

(B.com, Dip.in.Edu)

1998-2024 (26 வருடங்கள்)

அவர்களை பாடசாலைச் சமூகம் சார்பாக பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதமடைகின்றோம்.

Congratulations




ஆசிரியர் நலன்புரி சங்கம், யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.

(1655)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயநாடு நிலச்சரிவு தொடர்பாக முதல் தகவல் கொடுத்தவர் உயிரிழப்பு





(டில்லி)

வயநாடு நிலச்சரிவு தொடர்பாக முதலில் தகவல் கொடுத்த பெண் உயிரிழந்தது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கேரள மாநிலம், வயநாடு மாவட்டத்தில் உள்ள சூரல்மலை, முண்டக்கை, மேப்பாடி உள்ளிட்ட கிராமங்களில் கடந்த 30ஆம் திகதி அதிகாலை பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது.

இது தொடர்பாக முதலில் தகவல் கொடுத்த நீது என்ற பெண் சூரல்மலை கிராமத்தில் வசித்து வந்தார். கடந்த 30ஆம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு நீது வீட்டுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. உடனடியாக அவர் வயநாடு மருத்துவ அறிவியல் நிறுவனத்துக்கு தகவல் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து சூரல் மலை பகுதிக்கு மீட்புக் குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டனர். இதுதான் நிலச்சரிவு தொடர்பாக மீட்புக் குழுவுக்கு கிடைத்த முதல் தகவல் என கூறப்பட்ட நிலையில், சூரல்மலையில் மற்றொரு நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் மீட்புக் குழுவினர் அங்கு செல்வதற்கு முன் நீது மண்ணில் புதைந்துள்ளார்.

நீது குடும்பத்தினர் உள்ளிட்ட சிலர் மலை மீது ஏறி உயிர் தப்பிய நிலையில், மண்ணில் புதைந்து உயிரிழந்த நீதுவின் உடல் தற்போது மீட்கப்பட்டுள்ளது. (நி-6)

# பொது இடத்தில் பாடினது குற்றமா?





(டெஹ்ரான்)

பொது இடங்களில் ஹிஜாப் அணியாமல் பாடல் பாடிய பெண் ஈரானில் கைது செய்யப்பட்டார்.

ஈரானில் பெண்கள் ஹிஜாப் அணிவது கட்டாயம். ஹிஜாப் அணியாமல் பொது இடத்திற்கு வரும் பெண்கள் மீது கடுமையான தண்டனை வழங்கப்படும் அளவிற்கு அங்கு சட்டம் உள்ளது.

அந்த வகையில் ஜாரா எஸ்மெய்லி என்ற பெண் ஒருவர், டெஹ்ரான் தெருக்களில் அவ்வப்போது பாடல் பாடும்நிகழ்ச்சிநடத்திவருகிறார்.

இவர், மெட்ரோ ரயில், பூங்கா உள்ளிட்ட பொது இடங்களில் ஹிஜாப் அணியாமல் பாட்டு பாடும் வீடியோ இணையத்தில் வைரலாக பரவியது. இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

இஸ்லாமிய மக்கள் மீதான அடக்குமுறை சட்டங்களுக்கு எதிரான ஒரு வகையான எதிர்ப்பாக இது பார்க்கப்பட்டதால் அவர் கைது செய்யப்பட்டதாக அந்நாட்டு அதிகாரிகள் கூறுகின்றனர். ஈரானில் இது போன்ற நிகழ்வு புதிதல்ல. இதற்கு முன்னதாக பெண் சுதந்திரம் பற்றிய பாடல் எழுதியதற்காகவும், அந்நாட்டு அரசு மற்றும் சமூக பிரச்சினைகளை விமர்சித்து பாடல் எழுதியதற்காகவும் கூட கலைஞர்களை கைது செய்துள்ளனர். (நி-6)

# ஆந்திராவில் பரவி வரும் புதிய வகை காய்ச்சல் மூட்டு வலி ஏற்பட்டு நடக்க முடியாமல் போகும் அபாயம்

(டில்லி)

இந்தியா, ஆந்திர மாநிலம், குண்டூர் மாவட்டத்தில் வித்தியாசமான அறிகுறிகளுடன் புதிய வகைக் காய்ச்சல் பரவி வருகின்றது.

எவ்வாறெனில் சிக்கன் குனியாவைப் போன்ற இந்த காய்ச்சலுக்கு ஆர்போ வகையைச் சேர்ந்த வைரஸ்தான் காரணம் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கை,கால்கள் வீங்கி,மூட்டு வலி ஏற்பட்டு நடக்க முடியாமல் போவதாக கூறப்படுகிறது.


குடும்பத்தில் ஒருவருக்கு இந்தக் காய்ச்சல் வந்தாலும் வீட்டிலுள்ள ஏனையோருக்கும் பரவுவதால் மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

4 நாட்களுக்குள் காய்ச்சல் குறைந்தாலும் கை,கால் வீக்கமும் மூட்டு வலியும் குறையவில்லை எனவும் 6 வாரங்களுக்கு வலி நீடிப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும் காய்ச்சலினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் சுகாதாரத் துறையினரால் மருத்துவ முகாம்கள் நடத்தி சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக புதிய வகை காய்ச்சல் பரவி வருகின்றமை ஆந்திர மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி-6)

# உக்ரைனின் அதிரடியால் கடும் அச்சத்தில் புடின் அவசரகாலநிலை பிரகடனம்





(மொஸ்கோ)

ரஷ்யாவிற்குள் சுமார் 15 கிலோமீற்றர் வரை ஊடுவியுள்ள உக்ரைன் படையினர் அப்பகுதியிலுள்ள அணு உலையை கைப்பற்றலாம் என்ற தகவல் வெளியாகிய நிலையில் ரஷ்ய ஜனாதிபதி புடின் கடும் அச்சத்தில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் 300 படை வீரர்களையும் 11 கவசவாகனங்களையும் 20 கவச தாக்குதல் வாகனங்களையும் வடகிழக்கு எல்லையைத் தாண்டி ரஷ்யாவுக் குள் அனுப்பியுள்ளதாக ரஷ்ய இராணுவமும் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியில் உக்ரைன் படையினரின் எல்லை தாண்டிய தாக்குதல் தொடர்ந்ததால் அங்கு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாயன்று காலை 1000 உக்ரைனிய படையினர் அத்துடன் 11 டாங்கிகள் மற்றும் 20 இற்கும் மேற்பட்ட கவச போர் வாகனங்கள், சுட்ஜா நகருக்கு அருகில் ரஷ்யாவுக்குள் நுழைந்ததாக மொஸ்கோ தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமை முழுவதும் பல கிராமங்களில் சண்டை நடந்ததாகக் கூறப்படுகிறது.

உள்ளூர் அதிகாரிகள் குடியிருப்பாளர்களை தங்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தினர். மற்றும் அனைத்து பொது நிகழ்வுகளும் இரத்து செய்யப்பட்டன.

நேற்று முன்தினம் புதன் கிழமை அரசாங்க அதிகாரிகளுடனான ஒரு தொலைக்காட்சி சந்திப்பில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைன் "பெரிய ஆத்திரமூட்டல்" மற்றும் "கண்மூடித்தனமாக துப்பாக் கிச் சூடு" நடத்துவதாக குற்றம் சாட்டினார்.

இதேவேளை, உக்ரைன் படை வீரர்கள், அணு உலையை கைப்பற்றக் கூடும் என அஞ்சப்படுகிறது. அப்படி அந்த அணு உலையை உக்ரைன் படை வீரர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு, உக்ரைனுக்குச் சொந்தமான அணு உலையை தங்களிடம் ஒப்படைக்குமாறு மிரட்டலாம் என புடினுக்கு அச்சம் உருவாகியுள்ளதாக கூறப்படுகிறது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷில் இடைக்கால அரசு இன்று பதவி ஏற்பு

(டாக்கா)

**பங்களாதேஷில் முகமது யூனஸ் தலைமையிலான இடைக்கால அரசு இன்று பதவியேற்க உள்ளது.**

பங்களாதேஷில் இட ஒதுக்கீட்டை ரத்து செய்ய வேண்டுமென மாண வர்கள் போராட்டம் நடத்தினர். இந்த போராட்டம் தீவிரம் அடைந்ததால் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா டாக்காவில் இருந்து வெளியேறினார்.

அவர் தற்போது இந்தியாவில் உள்ளார்.

லண்டனில் தற்காலிகமாகக் குடியேற அனுமதி கேட்டுள்ளதாக தெரிகிறது. அனுமதி கிடைத்தால் லண்டனில் அடைக்கலம் புகுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், பங்களாதேஷத்தில் முகமது யூனஸ் தலைமையிலான இடைக்கால அரசு இன்று பதவியேற்க உள்ளதாக இராணுவத் தலைமை தளபதி அறிவித்துள்ளார்.

பிரதமர் என்ற பதவி இல்லாமல் தலைமை ஆலோசகர் என்ற பதவியுடன் 15 உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஆட்சி செய்ய உள்ளது

முகமது யூனஸ் தலைமையில் 15 உறுப்பினர்களுடன் பங்களாதேசத்தில் இடைக்கால அரசு இன்று இரவு 8 மணிக்கு பதவியேற்கிறது.

84 வயதாகும் முகமது யூனஸ், ஏழை மக்களை முன்னேற்ற பொருளாதார, சமூக முன்னெடுப்புகளை மேற்கொண்டதற்காக 2006 ஆம் ஆண்டில் நோபல் அமைதிப் பரிசை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)




# ஜப்பானில் பதிவான நிலநடுக்கங்கள் விடுக்கப்பட்டுள்ள சுனாமி எச்சரிக்கை

(டோக்கியோ)


ஜப்பானில் நேற்று 6.9 மற்றும் 7.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கங்கள் ஏற்பட்டதையடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் தெற்கு பிரதான தீவான கியூஷூவின் கிழக்கு கடற்கரையில் சுமார் 30 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது. அத்தோடு, கியூஷூ மற்றும் ஷிகோகு ஆகிய மேற்கு தீவுகளின் பசுபிக் கடற் கரையில் கடல் மட்டம் ஒரு மீற்றர் உயரும் அபாயம் இருப்பதாக ஜப்பான் அதிகாரிகள் தற்போது தெரிவித்துள்ளனர்.

மேலும், முதல் நில நடுக்கம் மியாசாகி கடற்கரையிலிருந்து 20 மைல் தொலைவில் கியூஷூவில் ஏற்பட்டது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)




# சூடானில் கடும் வறட்சி பொதுமக்கள் அவதி



(கார்டூம்)

சூடானில் கடும் வறட்சி காரணமாக பொதுமக்கள் அவதியடைந்து வருகின்றனர். டார்பூர் பகுதியில் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் வறட்சி ஏற்பட்டதால் அவர்களுக்கு தண்ணீர் மற்றும் உணவு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் குழந்தைகள், முதியோர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.(நி-6)

# பங்களாதேஷத்தை கட்டியெழுப்ப அன்பும் அமைதியுமே தேவை

(டாக்கா)

பங்களாதேஷை மீண்டும் கட்டியெழுப்ப அன்பும் அமைதியுமே தேவையென்று சிறையிலிருந்து விடுதலையாகியுள்ள பங்களாதேஷ் தேசிய கட்சித் தலைவர் கலிதா ஜியா தெரிவித்துள்ளார்.

அதன்படி நாம் இந்த நாட்டை வளமான நாடாக சீர்திருத்த வேண்டும் என்றும் இளைஞர்கள் தான் நமது எதிர்காலம்.

அவர்களின் கனவை நிறைவேற்ற ஜனநாயக முறையில் பங்களாளதேசத்தை புதிதாகக் கட்டமைக்க வேண்டும். இளைஞர்களின் கரங்களை வலுப்படுத்துமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் அறிவு கோபம், பழிவாங்கலுக்குப் பதிலாக நம் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப நமக்குத் தேவை அன்பும் அமைதியுமே என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க வைத்தியசாலைகளில் 52 மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசாங்க வைத்தியசாலைகளில் 52 மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.**

நேற்று பாராளுமன்றத்தில் மருத்துவத் திருத்தச் சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதத்தின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை அனைத்து உயிர் காக்கும் மருந்துகளும் வைத்தியசாலைகளில் உள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தும் தேசிய நிலையமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் சுகாதாரத்துறைத் தொடர்பான ஒன்பது சட்டமூலங்கள் எதிர்காலத்தில் முன்வைக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-6)

# ரணிலுக்கு ஆதரவு பவித்ரா தெரிவிப்பு

(கொழும்பு)

வனஜீவராசிகள் மற்றும் வன வள பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை தெரிவித்திருந்த நிலையில் பவித்ரா வன்னியாராச்சி எந்தவிதத் தீர்மானத்தையும் வெளியிட்டிருக்கவில்லை.

எவ்வாறிருப்பினும் நேற்று வியாழக்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டு தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 300 | 200-300 | 280 |
| உருளைக்கிழங்கு | 220 | 240 | 200 | 175 | 220 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 450 | 350-450 | 450 |
| தக்காளி | 250 | 300 | 280 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 180 | 130-150 | 200 |
| கோவா | 400 | 380 | 400 | 280 | 400 |
| கரட் | 300 | 350 | 280 | 250 | 320 |
| பூசணி | 180 | 160 | 160 | 150 | 180 |
| புடோல் | 150 | 150 | 150 | 140 | 250 |
| வாழைக்காய் | 250 | 250 | 280 | -- | 320 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 400 | 250-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 230 | 220 |
| பாகற்காய் | 300 | 400 | 450 | 500 | 500 |
| வெண்டக்காய் | 160 | 150 | 160 | 220-250 | 320 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 200 | 350 | 200 |
| பயற்றங்காய் | 250 | 300 | 200 | 200-250 | 300 |
| லீக்ஸ் | 350 | 400 | 280 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 300 | 300 | 300 | 300 |
| கறிமிளகாய் | 800 | 900 | 700 | 400 | 1000 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 150 | 40-60 | 120 |
| போஞ்சி | 600 | 600 | 600 | 350 | 700 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 250 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 60 | 40 | 50 | 100 |
| தேசிக்காய் | 600 | 700 | 600 | 400-500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 130 | 70 | 80-120 | 80-120 |
| இராசவள்ளி | -- | 800 | 650 | 220 | 700 |
| வெங்காயப்பூ | 200 | 350 | 300 | -- | 320 |
| முள்ளங்கி | 100 | 100 | 120 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 70 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 50 | 80 |

## இன்று ஒரு தகவல் 206



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கனவுகள்

சார் சான் இந்த நாட்டுக்கு ராஜா ஆகிவிட்டேன் என்றார் ஒருவர். எப்போது என்று கேட்டார் இன்னொருவர். நேற்று இரவு தூங்கிக் கொண்டு இருந்த போது என்றார் அவர். அப்படி என்றால் என்ன அர்த்தம். அவர் கனவு கண்டிருக்கிறார் என்று அர்த்தம்.

கனவில் தான் அது சாத்தியம். இல்லை என்றால் எந்தக் காலத்தில் அவர் ராஜாவாகப் போகிறார். சரி இந்தக் கனவுகளுக்கு விஞ்ஞானபூர்வமான விளக்கம் என்ன? நம்முடைய எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், பயங்கள், சந்தேகங்கள், இது எல்லாம் எமது மனதிலே பதிந்து விடுகிறதாம்.

இந்த உள்மனது முழித்துக் கொண்டு இருக்கும் பொழுது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்துவது இல்லை.

ஆனால் நாம் தூங்கும் போது அந்த எண்ணம் எல்லாம் முழித்துகொள்கிறதாம். அது தான் கனவு உண்டாவதற்கு அடிப்படையான காரணமாம்.

கனவுகளைப் பற்றி எவ்வளவோ ஆராய்ச்சிகள் நடந்து கொண்டு இருக்கிறது இருந்தாலும் இன்னும் முழுவதுமாக அதைப்பற்றி யாரும் அறிந்து கொண்டதாக தெரியவில்லை.

சோவியத் யூனியனிலே ஒரு நரம்பியல் மருத்துவ நிபுணர். இவர் கனவுகளைப் பற்றி ஆராய்ச்சி செய்பவர். அவர் கிட்டத்தட்ட 41 000 கனவுகளை ஆராய்ச்சி செய்து பார்த்து இருக்கிறார். அவர் என்ன சொல்கிறார் என்றால். சில சமயம் நல்ல கனவு வருகிறது. சில சமயம் கெட்ட கனவு வருகிறது. நல்ல கனவு வந்தால் உங்கள் உடம்பு ஆரோக்கியமாக இருக்கிறது என்று அர்த்தம். கெட்ட கனவு வந்தால் உங்களுடைய உடம்பில் ஏதாவது நோய் இருக்கலாம் அல்லது நோயின் அறிகுறி இருக்கலாம் என்கிறார்.

ஆழ்ந்து தூங்கும் போது உடம்பினுடைய எல்லா பகுதிகளும் பூரணமாக மூளையாலே உணரப்படுகிறதாம். ஏதோ ஒரு பகுதி நோயாலே தாக்கப்பட்ட அறிகுறி தெரிய வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது நரம்பு மண்டலம் வழியாக அதன் தாக்கம் கனவுகளிலே வெளிப்படக் கூடிய சாத்தியம் உண்டு என்று சொல்கிறார் அவர். தான் செய்த ஆராய்ச்சியில் இருந்து ஓர் உதாரணமும் கொடுக்கிறார். ஒரு ஆள் கனவு கண்டாராம் எப்படி? சோ என்று கொட்டுகின்ற மழை. அந்த மழையிலே அவர் நடந்து போய்க்கொண்டு இருக்கின்றார். காலிலே முழங்கால் வரைக்கும் மூடுகின்ற சப்பாத்து அணிந்திருந்தார். அவர் ஒவ்வொரு அடி எடுத்து வைப்பதற்கும் மிகவும் சிரமப்படுகின்ற மாதிரி தெரிகின்றது. இப்படி ஒரு கனவு. இந்தக் கனவு அதை முழித்துக் கொண்ட உடனே பார்த்தார் உடம்பு முழுவதும் பாரமாக இருக்கிறது. காலிலே வலி இருக்கின்றது. இதில் இருந்து என்ன தெரிகின்றது. கனவிலே கண்ட காட்சி தான் உடம்பிலே அந்த வலியை ஏற்படுத்தி இருக்கின்றது. இதனாலே ஆழ்ந்த உறக்கத்திலே இருக்கின்ற போது உடம்பிலே எல்லா உறுப்புக்களும் கனவோடு சம்பந்தப்பட்டு இருக்கிறது தெளிவாக தெரிகின்றது.

ஆனால் ஒரு விடயம். எல்லா கெட்ட கனவுமே நோயின் அறிகுறியாகத்தான் என்று சொல்லிவிட முடியாது. அதனாலே ஏதாவது கனவு கண்டு விட்டு உடம்பிலே என்ன கோளாறு என்று யாரும் தேடிக்கொண்டு இருக்க வேண்டாம். ஏன் என்றால் முன்னால் சொன்னது மாதிரி உள் மனதின் பயம், துக்கம் மற்றும் வசதி குறைவான தூக்கம். இவை எல்லாம் கூட கெட்ட கனவுகளை உண்டாக்கலாம்.

அதே மாதிரி சில பேருக்கு உடம்பிலே எந்தவித கோளாறும் இருக்காது. ஆனால் அவர்களுக்கும் சில பயங்கரமான கனவுகள் எல்லாம் வரும். இதற்கு என்ன காரணம் தெரியுமா? அவர்கள் எல்லாம் சரியாக காரணம் இல்லாமல் ஆத்திரப்படுகின்ற ஆசாமிகளாக இருப்பார்கள். ஏன் என்றால் அதிகமாகக் கோபப்படும் போது நரம்புகள் பாதிப்பு அடையும். அப்படி ஆகினால் அது பயங்கரமான கனவுகளை உண்டாக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு முடிவே இல்லாத தொடர்ச்சியான கனவுகள் வருவதற்கு கூட வாய்ப்பு உண்டாம்.

கனவுகளை பற்றி ஏன் முழுதாக தெரிந்து கொள்ள முடியவில்லை என்றால் அது எம்மிடம் வருகின்ற நேரம் நாம் தூங்குகின்ற நேரம்... முழித்து கொண்டதன் பின் கனவிலே கண்டதை முழுமையாக நம்மாலே சொல்ல முடியவில்லை. சில கனவுகள் ஞாபகத்திலே தங்குவதில்லை. தூக்கத்திலே கண்டதை தூக்கத்திலே விட்டு விடுங்கள். அத தான் நல்லது.


இராசிபலன் பார்க்கின்ற மாதிரி கனவுக்கு பலன் என்ன என்று பார்த்துக் கொண்டு வீணாக கவலைப்பட்டுக் கொண்டு இருக்காதீர்கள். நேரம் தான்வீண் நல்ல கனவு கண்டால் நாலு பேரிடம் சொல்லி சந்தோசப்படுங்கள். கெட்ட கனவு கண்டால் அமைதியாக இருங்கள். ஒருவர் சொன்னார் இன்னொருவரை பார்த்து சேர் நேற்றிரவு நீங்கள் என் கனவிலே வந்து என்னிடம் நூறு ரூபாய் கடன் வாங்கினீர்கள் என்றார் .

அப்படியா. அப்படி என்றால் அதை கண்டிப்பாக நான் திருப்பி கொடுப்பேன். அதுவும் வட்டியோடு திருப்பி கொடுப்பேன் தயவு செய்து நீங்கள் அதை மறுக்காமல் அதை திருப்பி வாங்கிக் கொள்ள வேண்டும் என்றார். இவருக்கு மிகவும் சந்தோசமாகப் போய்விட்டது.

கனவிலே கொடுத்த பணத்தை இவர் திரும்பத் தாரேன் என்று சொல்கின்றாரே என்று எண்ணிக் கொண்டு மிகுந்த ஆவலாக எப்போது கொடுக்கப் போகிறீர்கள் என்று கேட்டார் மறுபடியும் நான் உங்கள் கனவில் வரும்போது என்று சொன்னார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனற்ற நிலையில் உள்ள பேருந்து நிலைய கட்டடம்



(அக்கராயன்)

முல்லைத்தீவு பேருந்து நிலைய கட்டடத்தினை பயன்பாட்டிற்கு மாற்றுமாறு முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்னர் முல்லை மாவட்டச் செயலகத்திற்கு அருகில் பெருமளவு நிதியில் குறித்த பேருந்து நிலையக் கட்டடம் அமைக்கப்பட்டு கரைதுறைப்பற்று பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டது. ஆனால் குறித்த கட்டடம் முழுமையான பயன்பாட்டில் தற்போது இல்லை. இதன் காரணமாக பேருந்து கட்டடம் கால்நடைகளின் உறைவிடமாக மாறி உள்ளது. இப் பேருந்து நிலையக் கட்டடத்தில் இருந்து மாவட்டத்திற்குள்ளும் வெளி மாவட்டங்களுக்கும் பேருந்துகளை இயக்கக் கூடிய நடவடிக்கையினை உரிய அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-350)

# 60 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் 60 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 1 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, விற்பனைக்கு வைத்திருந்த பொருளின் விலை அழிக்கப் பட்டிருந்தமை, விலை குறிக்கப்படாமை, காலாவதியான பொருள்களை வைத்திருந்தமை, தகவல் குறிக்கப்படாமை, சரியான தராசை பயன்படுத்தாமை உள்ளிட்ட காரணங்களுக்காக 54 வழக்குகளும், வெதுப்பக உற்பத்திகள் தொடர்பில் 6 வழக்குகளுமாக 60 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வவுனியா மாவட்டத்திற்கான பொறுப்பதிகாரி தெரிவித்தார். ள (நி-6)

# ‘பரசூட்’ நெற்பயிர்ச்செய்கை அறுவடை அக்கராயனில்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் குளம் விவசாய போதனாசிரியர் பிரிவில் அக்கராயன் குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையில் நவீனமுறையான பரசூட் முறையிலான நெல் விதைப்பில் ஈடுபட்ட விவசாயி ஒருவரின் வயலில் அறுவடை விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அக்கராயன் குளம் பாடவிதான உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாடவிதான மற்றும் விவசாயப் போதனாசிரியர்களினால் வருகைதந்த விவசாயிகளுக்கும் பிரமுகர்களுக்கும் பரசூட் முறையிலான நெற்செய்கை முறை பற்றி விரிவான விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனை பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தின் வழிகாட்டலின் கீழ், மாவட்டத்தின் பல இடங்களிலும் இவ்வாறான முன்மாதிரி துண்டச் செய்கைகள் செய்கை பண்ணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-316)

## கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளி. மாவட்ட விவசாய வணிக சம்மேளனங்களின் ஏற்பாட்டில் ஈழத் தமிழர் சுய நிர்ணய உரிமையில் தமிழ்ப் பொதுவேட்பாளர் வாய்ப்புகளும் வகிபாகம் தொடர்பில் கருத்தாளர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற சட்டவாளர் திருமதி. விஜயராணி சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-6)

## வவு.வெளிக்குள சித்தி விநாயகர் மஹோற்சவம்

(வவுனியா)

வவுனியா வெளிக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 17 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் 18 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (நி-6)

## மருத்துவமுகாம்

(தருமபுரம்)

பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) யில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மருத்துவமுகாம் ஒன்று இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு பளை மத்திய கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றிருந்தது. பளை மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களின் உடல் நிலையை ஆராய்வதற்காக குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ் மருத்துவமுகாமிற்கு வைத்தியர் அருமைத்துரை மற்றும் நிதிபங்காளர் நலன் விரும்பிஅன்புமற்றும்ஆசிரியர், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (நி-6-316)

## விசுவமடு சித்திவிநாயகர் ஆலய மஹோற்சவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு விசுவமடு தொட்டியடிப் பகுதியில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் அலங்காரத் திருவிழா ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்துத் தினங்கள் அலங்காரத் திருவிழா இடம்பெற்று எதிர்வரும் 21 ஆம் திகதி காலை விசுவமடுக்குளத்தில் தீர்த்தோற்சவம் இடம்பெற்று இரவு கொடியிறக்கமும் 22ஆம் திகதி பூங்காவனமும் இடம் பெறவுள்ளன என ஆலய அறங்காவலர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)

# ஒக்டோபருக்கு தவணையிடப்பட்ட சதொச புதைகுழி வழக்கு

(மன்னார்)

மன்னார் சதொச மனித புதை குழி தொடர்பிலான வழக்கு நேற்று முன்தினம் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் கலந்துரையாடல் வடிவில் குறித்த வழக்கு விவாதிக்கப்பட்டது.

சதொச மனிதப் புதைகுழிப் பதியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஸ்கான் பரிசோதனை செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. மேலும் புதை குழியில் மீட்கப்பட்ட என்புகள் மற்றும் தடயப்பொருளின் மாதிரிகளை வெவ்வேறாக பிரிப்பதற்கான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் என்புகளை பால் வயது மரணத்திற்கான காரணம் தொடர்பில் ஆரய்வதற்கான அறிக்கையைத் தயார் செய்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் அதே நேரம் ஏனைய சான்றுப் பொருட்களை பேரசிரியர் ராஜ் சோமதேவிடம் கையளிக்குமாறும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

குறித்த அகழ்வு மற்றும் பரிசோதனைகளுக்கு தேவையான நிதி ஒதுக்கீட்டை காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளது. மேலும் குறித்த வழக்கு மேலதிக விசாரணைகளுக்காக ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதியிடப்பட்டுள்ளது.

இதன் போது அகழ்வுக்குப் பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி ராஜபக்ஸ,பேராசிரியர் ராஜ்சோம தேவ்,காணாமல் போனோர் சங்க பிரதிநிதிகள், OMP அலுவலக பிரதிநிதிகள், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளடங்கியோர் கலந்து கொண்டனர். (நி-6-285)

# போக்குவரத்து நெருக்கடியால் மாணவர்கள் பாதிப்பு

(அக்கராயன்)


முல்லைத்தீவு மாங்குளம் மகா வித்தியாலயத்திற்கு மாணவர்கள் வந்து செல்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

திருமுறிகண்டி, பனிக்கங்குளம், வன்னிவிளாங்குளம், கரிப்பட்டமுறிப்பு, ஒலுமடு, அம்பகாமம், மன்னகுளம் போன்ற பல கிராமங்களில் இருந்து பெருமளவு மாணவர்கள் மாங்குளம் பாடசாலைக்கு மிக நீண்ட தூரங்களில் இப்பாடசாலைக்கு வருகை தருவதில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

எனவே மாணவர்கள் நலன் கருதியாவது மாவட்டத்திற்குள் ஈடுபடுகின்ற பேருந்து சேவைகளுள் ஏதாவது ஒரு சேவையினை குறித்த கிராமங்களினூடாக முன்னெடுக்க சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாணவர்களின் பெற்றோர்கள் வேண்டுகோள் எடுத்துள்ளனர். (நி-6-350)

# சூட்சுமமாக கடத்தப்பட்ட தேக்க மரக்குற்றிகள் மீட்பு

→ இருவர் கைது
→ வாகனம் பறிமுதல்



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சூட்சுமமாக மறைத்து கடத்திச் செல்லப்பட்ட மரக்குற்றிகளுடன் டிப்பர் வாகனம் ஒன்றை நேற்றுக் காலை 9 மணியளவில் கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் இருவரைக் கைது செய்துள்ளனர்.

கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய கொடிகாமம் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியான பிரதான பொலிஸ் பரிசோதகர் சிவலிங்கம் பிரபாகரன் தலைமையில் கீழ் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களும் இணைந்து குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது குறித்த டிப்பர் வாகனத்தினுள் மரக்குற்றிகள் அடுக்கப்பட்டு அதற்கு மேல் சிறிய கற்கல் ஏற்றப்பட்டு சூட்சுமமான முறையில் கடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

சுமார் 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான 24 தேக்க மரக்குற்றிகளே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டது. சம்பவத்தில் சாரதி உட்பட இருவர் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களை இன்று சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் ஆயர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6-30-33)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் **பாகம் - 3**

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 553





ஒருவேளை பெரிய பழுவேட்டரையர் இந்தப் பக்கமாய் வரப்போகிறார் என்று அறிந்து இப்படி ஊரை அலங்காரம் செய்திருக்கலாம். பழுவேட்டரையரும், அவர் பரிவாரமும் வருவதற்குள் தான் வெகுதூரம் போய்விடலாம் என்பது நிச்சயம்.

மற்றொரு பக்கத்தில் கிராமத்து ஜனங்கள் ஸ்திரீகள், புருஷர்கள், வயோதிகர்கள், சிறுவர் சிறுமிகள் அனைவரும் அங்கங்கே கும்பல் கும்பலாக நின்று கவலையுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். விடயம் என்னவாயிருக்குமென்று அவனால் ஊகிக்க முடியவில்லை. அவர்களில் சிலர் குதிரையில் வருகிறவனைக் கண்டதும் அவனை நிறுத்தும் எண்ணத்தோடு அருகில் வந்தார்கள். வந்தியத்தேவன். அதற்கு இடங்கொடாமல் குதிரையைத் தட்டி விட்டுக் கொண்டு மேலே போனான். வீண் வம்புகளில் அகப்பட்டுக் கொள்ள அவன் இஷ்டப் படவில்லை.

கிராமத்தைத் தாண்டியதும் சாலை ஓரத்தில் கொல்லுப் பட்டறை ஒன்று இருக்கக் கண்டான். அதைக் கடந்து மேலே செல்ல அவனுக்கு மனம் வரவில்லை. குதிரையை நிறுத்திவிட்டுப் பட்டறைக்குள் சென்றான்.

பட்டறைக்குள் கொல்லன் ஒருவன் வேலை செய்து கொண்டிருக்கக் கண்டான். ஒரு சிறுவன் துருத்து ஊதிக் கொண்டிருந்தான். வந்தியத்தேவன் உள்ளே பிரவேசித்த அதே சமயத்தில் இன்னொரு மனிதன் பின்பக்கமாக மறைந்ததாகவும் அவனுக்குத் தோன்றியது. ஆனால் இதிலெல்லாம் அவன் கவனம் செல்லவில்லை.

கொல்லன் கையில் வைத்துக் கொண்டிருந்த வாள் அவனுடைய கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தது. அது ஓர் அபூர்வமான வாள். பட்டறையில் வைத்துக் கொல்லன் அதைச் செப்பனிட்டுக் கொண்டிருந்ததாகத் தோன்றியது. அதன் ஒரு பகுதி பளபளவென்று வெள்ளியைப் போலப் பிரகாசித்தது. இன்னொரு பகுதி நெருப்பிலிருந்து அப்போது தான் எடுக்கப்பட்டிருந்த படியால் தங்க நிறச் செந்தழல் பிழம்பைப்போல் ஜொலித்தது.

"வாள் என்றால் இதுவல்லவா வாள்!" என்று வந்தியத்தேவன் தன் மனத்திற்குள் எண்ணி வியந்தான்.

## பன்னிரண்டாம் அத்தியாயம்
## "தீயிலே தள்ளு!"

கொல்லன் சிறிது நேரம் தன் வேலையிலேயே கவனமாயிருந்தான். வந்தியத்தேவன் இரண்டு மூன்று தடவை கனைத்த பிறகு நிமிர்ந்து பார்த்தான்.யார், அப்பனே, நீ! உனக்கு என்ன செய்ய வேண்டும்? வாள், வேல் ஏதாவது வேண்டுமா? வாளுக்கும் வேலுக் குந்தான் இப்போதெல்லாம் தேவையில்லாமல் போய் விட்டதே? நீ வாளுக்கு எங்கே வந்திருக்கப் போகிறாய்?" என்றான் கொல்லன்.

"என்ன ஐயா, இவ்வாறு சொல்கிறீர்? உம்முடைய கையில் வாளை வைத்து வேலை செய்து கொண்டே வாளுக்குத் தேவையில்லையென்கிறீரே?" என்றான் வந்தியத்தேவன்.

"இது ஏதோ அபூர்வமாக வந்த வேலை பழைய வாளைச் செப்பனிடுவதற்காகக் கொண்டு வந்தார்கள். சில வருடங்களுக்கு முன்னால் பாண்டிய நாட்டுப் போரும், வட பெண்ணைப் போரும் நடந்து கொண்டிருந்தபோது இந்தப் பட்டறையில் மலை மலையாக வேலும் வாளும் குவிந்திருக்கும். இலங்கை யுத்தம் ஆரம்பமான புதிதில் கூட ஆயுதங்களுக்குக் கிராக்கியிருந்தது. இப்போது வாளையும் வேலையும் கேட்பாரில்லை. பழைய வாள்களையும் வேல்களையும், என்னிடம் கொண்டு வந்து விற்பதற்காக வருகிறார்கள். நீ கூட அதற்காகத் தான் ஒரு வேளை வந்தாயா என்ன?"

"இல்லை, இல்லை! இன்னும் சில காலத்துக்கு எனக்கு வாள் தேவையாயிருக்கிறது. ஒப்புக் கொண்ட வேலையை முடித்து விட்டால், அப்புறம் கையில் தாளத்தை எடுத்துக் கொண்டு தேவாரம் பாடிக்கொண்டு சிவ ஸ்தலயாத்திரை புறப்படுவேன். அப்போது வேணுமானால் என் ஆயுதங்களை உம்மிடமே கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நேர்மை உயர்வு தரும்



(நேற்றைய தொடர்ச்சி...)

அப்போது காட்டு வழியில் போகும் போது அங்கே ஒரு புறா அடிப்பட்டு கீழே கடந்தது. அதை பார்த்து இரக்கப்பட்ட பூபாலன் அந்த புறாவை தூக்கிக் கொண்டு அருகில் இருந்த குளத்திற்கு கொண்டு சென்ற தண்ணீரை எடுத்து அந்த புறாவின் வாயில் ஊற்றினார். பின்னர் அந்தப் புறாவை அருகில் இருந்த மரக்கிளையில் வைத்து விட்டு வந்தார்.

அவர் அப்படி வரும் போது பாதையின் ஓரத்தில் காலில் ஏதோ மாட்டியதை கண்டார். அது ஒரு பை அதில் நிறைய பணமும் இருந்தது. அதை எடுத்தவுடன் பூபாலனுக்கு யாரோ பாவம், தன் பணப் பையை விட்டுவிட்டு போயிட்டாங்க, அப்படி தொலைத்தவர் மனம் எத்தனை வேதனைப்படுமோ, எனவே விரைவில் அவரை கண்டுபிடித்துகொடுத்துவிட வேண்டும் என்று ஊருக்கு விரைந்தார்.

அப்போது ஊருக்குள் சென்ற போது அங்கு இருந்த கடையில் விசாரித்தபோது கடைக்காரர் சோமனைப் பற்றி சொல்லி அவர் தான் தொலைத்தவர், நீங்கள் இதை கொடுத்தால், கண்டிப்பாக சன்மானம் கொடுப்பார் என்றார்.

உடனே பூபாலனும் சோமன் வீட்டை தேடி பிடித்து சென்று பணப்பை கிடைத்த விபரத்தை சொன்னார். சோமனுக்கு சந்தோசம் தாங்கமுடிய வில்லை. உடனே அந்தப் பணப்பையை வாங்கிக் கொண்டார். அதேநேரம் அவரது கெட்ட எண்ணமும் வெளிப்படத் தொடங்கியது. பணப்பை கிடைத்துவிட்டது, பணமும் சரியாக இருந்தது இப்போ ஏன் இவனுக்கு சன்மானம் கொடுக்க வேண்டும். சன்மானம் கொடுக்காமல் தப்பிக்க என்ன செய்யலாம் என்று யோசித்தார் சோமன்.

கெட்ட மனம்கொண்ட சோமன் பூபாலனைப் பார்த்து 'நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய், நான் என்னுடைய பையில் வைர மோதிரம் ஒன்றையும் வைத்திருந்தேன். அதை காணவில்லை. மரியாதையாககொடுத்து விடு, உன்னை சும்மா விட மாட்டேன்'என்று கத்தினான்.

பூபாலனுக்கு ஒன்றுமே புரியவில்லை, ஒருவேளை இவர் சொன்னது போல் வைர மோதிரம் இருந்து தொலைந்து போயிருக்குமா, நாம் தான் எடுக்கவில்லையே இவரிடம் சன்மானம் வாங்குவதைவிட பிரச்சினையில் இருந்து தப்பிக்கலாம் என்று யோசித்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிவேலன் அருளால் செய்யும் செயல்கள் யாவும் வெற்றி பெறும் நாளாக அமையட்டும்...

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் ஈழத் தமிழினத்தின் பெருந்தலைவன் நல்லூர் முருகன்

நல்லூர்க் கந்தப் பெருமானின் பெருந்திரு விழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகின்றது.

நல்லூர்க் கந்தனின் திருவிழா ஆரம்பித்து விட்டால், எங்கள் தமிழ்த் தேசம் விழாக் கோலம் பூண்டுவிடும்.

ஆம், நல்லூர் இராசதானியில் இருந்து நம்மை ஆண்டு கொண்டிருக்கின்ற நல்லூர்க் கந்தசுவாமி எங்கள் தமிழ் இனத்தின் பெருந் தலைவன். அவனே! எங்கள் இனத்தின் ஆட்சித் தலைவன். எந்தத் துன்பம் வந்தா லும் அவனின் அருளாட்சியால் எங்கள் தமி ழினம் தழைத்தோங்கும்.

அதனாலேயே நல்லூர்க் கந்தப்பெரு மானின் மகோற்சவம் என்றால், உலகமெங் கும் அவன் புகழ் பேசப்படும். அந்தளவுக்கு நல்லூர்க் கந்தப்பெருமானின் அருளாட்சி இந்த அகிலம் முழுமையையும் ஆண்டு கொண்டிருக்கின்றது.

அதிலும் இலங்கைக்கு வருகின்ற வெளி நாட்டவர்கள் யாழ்ப்பாணத்துக்கு போக வேண் டும் என்று அவாக் கொள்கின்றனர்.

அதற்கு முக்கிய காரணம், நல்லூர்ப் பதி யில் வீற்றிருக்கும் கந்தப்பெருமானை ஒரு தடவையேனும் தரிசித்துவிட வேண்டும் என்ற அவா என்பது இங்கு உணர்தற்குரியது.

ஆம், நல்லூர் முருகனின் ஆலயத்துக்கு வருகின்ற வெளிநாட்டவர்கள் – வெள்ளைக் காரர்கள் முருகனையும் ஆலயத்தின் தோற் றத்தையும் ஆச்சரியத்தோடு பார்த்துப் பிர மிப்பர்.

அவர்களின் பார்வையில் தெரிகின்ற ஆச் சரியத்தைப் பார்க்கும்போது; இந்த ஆல யத்தை – முருகப்பெருமானை – இந்த இடத்தை நான் முன்பு பார்த்திருக்கின்றேன். ஒருபோதும் நான் நல்லூருக்கு வரவில்லை. இது எப்படிச் சாத்தியமாகும் என்பது போல அந்தப் பிரமிப்பு அமைந்திருக்கும்.

இங்குதான் குடியேற்றவாத நாடாக இல ங்கை இருந்தபோது, நல்லூர் இராசதானி யில் நடமாடிய அந்நியர்கள் மறுபிறப்பெடுத்து இப்போது நல்லூர் முருகனிடம் வந்து முற் பிறப்பு ஞாபகத்தில் மூழ்கித் திகைக்கின்ற னரோ என்று நாம் நினைப்பதுண்டு.

உண்மை. எங்கள் நல்லூர்க் கந்தப்பெரு மான் எங்கள் ஆட்சித் தலைவனல்லவா! அதனால் அவனை வழிபடவும் அவனின் இடத்தைப் பார்க்கவும் வெளிநாட்டவர்கள் வந்த வண்ணமுள்ளனர்.

ஆகையால் நல்லூர்க் கந்தப்பெருமானின் சேத்திரத்தைப் புண்ணிய பூமியாகப் பாதுகாப் போம்.

நல்லூர்க் கந்தனின் திருவீதி உன்னத மான வாழ்வு தருகின்ற திருமண். அந்த புண் ணிய மண்ணைப் புனிதமாகப் பேணுவோம்.

கூடவே ஆசாரத்தை – தெய்வீகத்தை – எங்கள் தமிழ்ப் பண்பாட்டைப் பேணிப் பாதுகா ப்போம். அதன்மூலம் நல்லூர்க் கந்தனை மனங் குளிரச் செய்வோம். வாரீர்.

# தமிழர் பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வு சஜித்திடமே

## தாயகக் கட்சிகளுக்கு மனோ அழைப்பு

தமிழர் பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தி யமான தீர்வினைப்பெற ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு – கிழக்கில் உள்ள தமிழ்க் கட்சிகள் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கவேண்டும் என தமிழர் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அழை ப்பு விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி யின் தலைமையில் உரு வாக்கப்பட்டுள்ள கூட்ட ணிக்கான உடன்படி க்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று கொழும்பு சுகததாச உள்ளக விளை யாட்டரங்களில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் உரை யாற்றும் போதே மனோ கணேசன் மேற்படி அழைப்பை விடுத்தார்.

பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என மத ரீதியாகவும் சிங் களவர்களும், தமிழர் களும், முஸ்லிம்களும் இணைந்து இன ரீதி யாக ஒன்றுபட்டு இலங் கையர் கூட்டணியாக ஐக்கிய மக்கள் கூட்டணி உள்ளது. அனைவரும் இலங்கையர்களாக ஒன்றுக்கூடக் கூடிய இட மாக இந்த கூட்டணி உள்ளது.

அதேபோன்றுநாட்டை கட்டியெழுப்பக் கூடிய மற்றும் பொருளாதாரம் தொடர்பில் நிபுணத்து வம் கொண்ட அணியும் எம்மிடமே உள்ளது.

வடக்கு,கிழக்கை பிர திநிதித்துவப்படுத்தும் கட்சிகள் நடைமுறை க்கு சாத்தியமான தீர் வுகளை பெற்றுக்கொ ள்ள இந்த மகா கூட்ட ணியில் இணையுமாறும் அழைப்பு விடுக்கிறேன் என்றார். (ம-7)

## பொலிஸாரின் துப்பாக்கியை பறிக்க முயன்றவர் மரணம்

சீதுவை பொலிஸ் பிரி விற்குட்பட்ட கொட்டு கொடை வீதி சோதனை சாவடியில் துப்பாக்கி வெடித்ததில் பொலிஸ் சார்ஜன்ட் காயத்திற்கு உள்ளாகியுள்ளதோடு நபரொருவர் உயிரிழந் துள்ளார்.

சீதுவை பொலிஸ் நிலைய அதிகாரிகள் சீதுவைப் பகுதியிலிருந்து வந்த காரினை சோத னையிட முற்பட்ட போது இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த காரின் இடது ஆசனத்தில் அமர்ந்திரு ந்த நபரொருவர் பொலிஸ் சார்ஜன்டின் கடமை துப்பாக்கியை பறிக்க முற்பட்ட போது, துப்பா க்கி வெடித்ததில் பொலிஸ் அதிகாரியின் காலிலும், பறிக்க முற்பட்ட நப ரின் வயிற்றிலும் துப்பாக் கிச் சூட்டு காயங்கள் ஏற்பட்டுள்ளது.

பின்னர் இருவரும் நீர்கொழும்பு வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்ட நிலையில் காரில் பயணித்த பூகொடை பிர தேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபர் சிகி ச்சை பலனின்றி உயிரிழ ந்தார்.

சீதுவைப் பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## சட்டவிரோத சிகரெட்டுகளுடன் இளைஞன் கைது

(கட்டுநாயக்க)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சட்டவி ரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட சிகரெட்டுக ளுடன் இளைஞர் ஒரு வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க பொலிஸ் போதைப்பொருள் ஒழி ப்புப்பிரிவின் அதிகாரிகளி னால் விமான நிலைய வளாகத்தில் நேற்றுக் காலை இந்த சுற்றி வளைப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளதாக பொலி ஸார் குறிப்பிட்டுள்ள னர்.

இதன் போது சந் தேகநபர் டுபாயில் இரு ந்து வந்துள்ளதுடன், இலங்கைக்கு வரியின்றி கொண்டு வரப்பட்ட 28, 400 சிகரெட்டுகள் மற் றும் 142 அட்டைப்பெட் டிகள் அவரது பயணப் பொதியில் இருந்து கண் டுபிடிக்கப்பட்டுள்ளன.

22 வயதான குறித்த சந்தேக நபர் கலப்புவல ந்த பிரதேசத்தை சேர்ந்த வராவார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரி வின் விமான நிலையப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## இளைஞர்களின் பேராதரவு நாமலுக்கே - மகிந்த நம்பிக்கை

எதிர்வரும் ஜனாதிப தித் தேர்தலில் இளைஞ ர்களின் ஆதரவைப் பெற்று நாமல் ராஜபக்ஷ வெற்றியீட்டுவார் என முன்னாள் ஜனாதிபதி யும் பொதுஜன பெரமுன வின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ நம் பிக்கை தெரிவித்துள் ளார்.

தேசத்தின் இளைஞர் களுக்கு வழிகாட்டுவ தற்கும் அவர்களுக்கு உதவுவதற்கும் ஒரு இளம் தலைவர் தேவை என்றும், 'அரகலய' செய ற்பாட்டாளர்களின் வேண் டுகோளுக்கு செவிசாய் த்து தான் இளம் தலை வர் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ம-7)

## விபரீத முடிவெடுத்து மாணவன் பலி

ஹட்டன், நோர்வூட் பகுதியில் மாணவன் ஒரு வர் தனது வீட்டிற்கு அரு கில் உள்ள விறகு கொட் டகையில் தூக்கிட்டு தற் கொலை செய்துக் கொண் டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டங்கல் தோட்டத்தைச் சேர்ந்த ஹட்டன் கல்வி வலயத் திற்குட்பட்ட நோர்வூட் டங்கல் தமிழ் வித்தியால யத்தில் 09 ஆம் ஆண் டில் கல்வி கற்ற முரு கானந்தன் அபிஷேக் என்ற 15 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாண வன் பல நாட்களாக பாட சாலைக்குச் செல்லாத தால் பெற்றோர் அவரை பாடசாலைக்கு செல லுமாறு வற்புறுத்தியுள் ளனர். இதன் பின்னர் குறித்த சிறுவன் தூக்கி ட்டு தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்க ப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதையடுத்து சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை நோர்வூட் பொலி ஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (ம-7)

## மக்களின் மீட்சிக்கென மக்கள்துறை உருவாக்கம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசதுறை மற்றும் தனியார் துறைகளுக்கு மேலதிகமாக மக்களை பொருளாதார ரீதியாக உயர்த்துவதற்காக மக் கள் துறையொன்று உரு வாக்கப்படும் என ஜனா திபதி ரணில் விக்கிர மசிங்க தெரிவித்துள் ளார்.

கூட்டுறவு திணைக் களத்தை மக்கள் துறை யின் சாரதியாக மாற்றுவ தற்காக நாட்டில் சுதந் திரமான வலுவான கூட் டுறவு திணைக்களத்தை கட்டியெழுப்புவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டு கிறார்.

கொழும்பில் உள்ள இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மையத் தில் நடைபெற்ற கூட் டுறவு திணைக்களத் தின் எதிர்காலப் போக்கு குறித்து கலந்துரையா டும் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித் தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதித் தேர்தல் 2024 செப்டெம்பர் 21
# கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்கள் பற்றிய ஒரு மீள் பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

05

இத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் 1988 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை கொழும்பு மாநகர சபை மண்டபத்தில் ஏற்றுக் கொள்ளப்படுமென தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா அவர்களினால் அறிவிக்கப்பட்டது. இதற்கிணங்க 3 அபேட்சகர்கள் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

திரு. ரணசிங்க பிரேமதாச (ஐக்கிய தேசியக்கட்சி), சிறிமாவோ பண்டாரநாயக்கா (இலங்கை சுதந்திரக் கட்சி), திரு. ஒஸி அபய குணவர்தனா (இலங்கை மக்கள் கட்சி) நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்தனர்.

1988 டிசம்பர் 19 ஆம் திகதி யன்று தேர்தல் நடைபெறுமென அறிவிக்கப்பட்ட போதிலும் கூட, தேர்தலை நடத்துவதில் அரசாங்கமும் பாரிய இடர்பாடுகளை எதிர் நோக்கியது. தேர்தல் அதிகாரிகளை பல வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அனுப்ப முடியாத நிலை கூட ஏற்பட்டன. மறுபுறமாக பல பகுதிகளில் வாக்காளர்களும் அச்சுறுத்தப்பட்டனர். வாக்களிக்கச் சென்றால் கொலை செய்யப்படுவர் என்ற பகிரங்க அறிவித்தல்களும் விடுக்கப்பட்டன.

இலங்கை அரசியல் வரலாற்றில் இதுவரை நிகழாத நிகழ்வாக சில வாக்கெடுப்பு நிலையங்களுக்கு ஒரு தேர்தல் அதிகாரியையாவது அனுப்பிக்கொள்ள முடியவில்லை. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களினால் ஒரு வாக்களிப்பு நிலையத்தில் கடமைக்குச் சென்ற அதிகாரிகளினால் கடமையாற்றக் கூடிய வாய்ப்பு உருவாகவில்லை. இதனால் 50 வாக்கெடுப்பு நிலையங்களை இரத்துச் செய்யும் நிலை தேர்தல் ஆணையாளருக்கு ஏற்பட்டது.

போக்குவரத்து சீர்குலைவு காரணங்களினால் 800 வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்களிப்பு நீண்டநேரம் தாமதித்தே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 375 வாக்களிப்பு நிலையங்களில் 100 இற்கும் குறைவான வாக்குகள் பதிவாகியுள்ளதையும் தேர்தல் ஆணையாளரின் அறிக்கை மூலமாகக் காணமுடிகின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் 1988 டிசம்பர் 19 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலில் அகில இலங்கை ரீதியாக வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த வாக்காளர் எண்ணிக்கை 9,375,742 ஆகும். இவர்களுள் 5,186,223 (55.32%) வாக்களர்கள் வாக்களித்த போதிலும் கூட 5,094,778 வாக்குகளே செல்லுபடியான வாக்குகளாக இருந்தன.

யாப்பு விதிகளுக்கு இணங்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர் செல்லுபடியான வாக்குகளில் 50 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றாக வேண்டும். அதாவது இத்தேர்தலில் 2,547,389 வாக்குகளுக்கு மேல் பெறுபவரே ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். திரு. ஆர். பிரேமதாச அவர்கள் 2,569,199 வாக்குகளை அதாவது 50.43% வாக்குகளைப் பெற்றதினால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, நாட்டின் மூன்றாவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக 1989.01.02 ஆம் திகதி பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

### 2வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1988

| வேட்பாளர் | கட்சி | வாக்குகள் | % |
|---|---|---|---|
| ரணசிங்க பிரேமதாச | ஐக்கிய தேசியக்கட்சி | 2,569,199 | 50.43% |
| சிறிமாவோ பண்டாரநாயக்கா | இலங்கை சுதந்திரக் கட்சி | 2,289,860 | 44.95% |
| ஒஸி அபயகுணவர்தனா | இலங்கை மக்கள் கட்சி | 235,719 | 4.63% |
| செல்லுபடியான வாக்குகள் | | 5,094,778 | 100.00% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | | 91,445 | |
| மொத்தமாக வாக்களித்தோர் | | 5,186,223 | |
| பதிவான வாக்குகள் | | 9,375,742 | |
| வாக்குவீதம் | | 55.32% | |

### 2வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1988

வட மாகாணம்

| | யாழ் மாவட்டம் | | வன்னி மாவட்டம் | |
|---|---|---|---|---|
| வேட்பாளர் | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| ரணசிங்க பிரேமதாச | 33,650 | 28.03% | 10,580 | 55.78% |
| சிறிமாவோ பண்டாரநாயக்கா | 44,197 | 36.82% | 4,889 | 25.77% |
| ஒஸி அபயகுணவர்தனா | 42,198 | 35.15% | 3,500 | 18.45% |
| செல்லுப்படியான வாக்குகள் | 120,045 | 93.38% | 18,969 | 96.40% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 8,517 | 6.62% | 708 | 3.60% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 128,562 | 21.72% | 19,677 | 13.79% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 591,782 | | 142,723 | |

### 2வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1988

கிழக்கு மாகாணம்

| | மட்டக்களப்பு மாவட்டம் | | திகாமடுல்லை மாவட்டம் | | திருகோணமலை மாவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| வேட்பாளர் | வாக்குகள் | % | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| ரணசிங்க பிரேமதாச | 61,657 | 50.99% | 96,420 | 50.77% | 36,841 | 45.70% |
| சிறிமாவோ பண்டாரநாயக்கா | 21,018 | 17.38% | 83,137 | 43.78% | 29,679 | 36.81% |
| ஒஸி அபயகுணவர்தனா | 38,243 | 31.63% | 10,352 | 5.45% | 14,103 | 17.49% |
| செல்லுப்படியான வாக்குகள் | 120,918 | 95.91% | 189,909 | 98.08% | 80,623 | 98.38% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 5,163 | 4.09% | 3,802 | 1.92% | 1,326 | 1.62% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 126,081 | 58.48% | 193,711 | 72.89% | 81,949 | 53.81% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 215,585 | | 265,768 | | 152,289 | |

### பதில் ஜனாதிபதி திரு.டி.பி. விஜயதுங்க நியமனம்

1993 மே 1 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2ஆவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அவர்கள் படுகொலை செய்யப்பட்டதையடுத்து ஜனாதிபதியின் பதவி வெற்றிடமானது. இலங்கை ஜனாதிபதி அவர்களின் மறைவையடுத்து அரசியலமைப்பின் 37(2), 40(1) (இ) ஏற்பாடுகளுக்கமைய 1993 மே 1 ஆம் திகதி இலங்கையின் அப்போதைய பிரதமர் திரு.டி.பி. விஜயதுங்க பதில் ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். அரசியலமைப்பின்படி பதில் ஜனாதிபதிக்கு ஒரு மாதம் மட்டுமே கடமையாற்ற முடியும்.

இதன்படி 1993.05.07ஆம் திகதி பாராளுமன்றம் கூட்டப்பட்ட போது பதில் ஜனாதிபதி திரு.டி.பி.விஜயதுங்க அவர்களின் பெயர் ஜனாதிபதி வேட்பாளராக முன்மொழியப்பட்டு (விஜயபால மென்டிஸ் முன்மொழிந்தார்) வழிமொழியப்பட்டு (ஏ.சி.எஸ்.ஹமீட் வழிமொழிந்தார்) எதிர்ப்பிரேரணைகள் இல்லாதிருந்தமையினால் அவர் ஜனாதிபதியாக ஏகமனமதாக தெரிவு செய்யப்பட்டார். இவரின் பதவிக்காலம் 1995.01.02 உடன் முடிவடைந்தது. ஒருமுறை ஒரு கூட்டத்தில் ஜனாதிபதி டி.பி.விஜேயதுங்கா "இந்த நாட்டில் இனப்பிரச்சினை யென்றே ஒன்றில்லை. இருப்பது பயங்கரவாதப் பிரச்சினை தான். அதனால் பயங்கர வாதத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதுதான் இப்பிரச்சினைக்குத் தீர்வு என்றும் தமிழ் மக்கள், சிங்கள மக்கள் என்ற மரத்தைச் சுற்றியிருக்கும் கொடிகள்" எனக் கூறி தமிழ் மக்களின் மனதை நோகடித்தார்.

### மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் -1994

மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆந் திகதி நடைபெற்றது. அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதில் மீண்டும் ஐ.தே கட்சிக்குள் இழுபறி நடந்தது. முடிவில் காமினி திசாநாயக்காவின் பெயரை ஐக்கிய தேசியக் கட்சி பிரேரித்தது. தனது பெயரை முன்மொழியாதது ஜனாதிபதியாகவிருந்த டி.பி.விஜேதுங்கவிற்கு மனஸ்தாபத்தை ஏற்படுத்தியிருந்தது. இச்சமயத்தில் மிகவும் எதிர்பார்ப்புடன் சந்திரிகா குமாரதுங்க எதிரணிகளை ஒன்று திரட்டி காமினியை எதிர்த்துப் போட்டியிட்டார்.

காமினியிடம் பணப்பலம், அனுபவம் அனைத்தும் இருந்தன. ஜனாதிபதி டி.பி.விஜேயதுங்கவின் ஆதரவு இல்லாமலே அரச அதிகாரத்தை பயன்படுத்தக் கூடிய அளவுக்கு அவருக்கு செல்வாக்கும் அங்கீகாரமும் இருந்தது. எனவே ஜனதிபதி தேர்தலில் கடுமையான போட்டியொன்றை நாடு எதிர்பார்த்தது.

திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொதுசன ஐக்கிய முன்னணி), நிஹால் கலப்பதி (ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி), காமினி திசாநாயக்க (ஐக்கிய தேசியக்கட்சி), ஏ.ஜே.ரணசிங்க (சுயேட்சை), ஹரிச்சந்திர விஜேதுங்க (சிங்களே மகாசம்மத பூமிபுத்திர கட்சி), ஹட்சன் சமரசிங்க (சுயேட்சை) ஆகிய ஆறு அபேட்சகர்கள் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

### அபேட்சகர் கொலை

தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த காமினி திசநாயக்க 1994 ஒக்டோபர் 23ஆம் திகதி நள்ளிரவு 12.17 அளவில் கொழும்பு தொட்டலங்க (பாலத் தோட்டை) நாகலம் வீதியில் அமைந்துள்ள பொதுச் சந்தை மைதானத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றி விட்டு தமது இருக்கையை நோக்கிச் செல்கையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் கொலை செய்யப்பட்டார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர்க்...

கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

இலங்கையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்து ஆலயங்களில் ஒன்றான நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட மகோற்சவப் பெருவிழா இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

அதன்படி, இன்று முதல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி வரை 27 நாட்கள் இந்த மகோற்சவப் பெருவிழா நடைபெறவுள்ளது.

இந்நிலையில், கொடியேற்றம் 9 ஆம் திகதி இன்றும் இரதோற்சவம் செபரெம்பர் முதலாம் திகதியும் இடம் பெறவுள்ளன.

இதேவேளை நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழாவை முன்னிட்டு நேற்றுக் காலையில் இருந்து நல்லூர் ஆலய சுற்று வீதிகளில் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளது.

குறித்த வீதித் தடை செப்ரெம்பர் 4 ஆம் திகதி மாலை வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்து விடப் படும்.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ். மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ். நகரை அடைய முடியும் என்பதுடன் இரதோற்சவம் மற்றும் சப்பறத் திருவிழாக்களின்போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.08.08
சீட்டிழுப்பு இலக்கம் 5559
R 2 7 2 2 9 2
அத சம்பத
R 2 2 9 2
சீட்டிழுப்பு இலக்கம் 134
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.08.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1589
L 10 13 19 46 L
40148

மெகா பவர்
திகதி 08/08/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1907
Z 05 23 51 52 75
06778

லக்கி 7 VIP
திகதி 2024.08.08
சீட்டிழுப்பு இலக்கம் 0385
V 3 9 1 3 4 0 V

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3801
சீட்டிழுப்பு திகதி 08.08.2024
W 01 05 12 28
W
53432

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.08
சீட்டிழுப்பு இலக்கம் 0868
கன்னி 07 25 37 41 கன்னி
55753 05


## பொது வேட்பாள...

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சுரேஸ் பிரேமச்சந்திரன்,

"எமது பொது வேட்பாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்பதனால் சுயேட்சையாகப் போட்டியிட முடியும்.

அதனால் அவர் சுயேட்சையாகவே போட்டியிடுகிறார்.

தமிழ்ப் பொது வேட்பாளராக போட்டியிடக்கூடிய 75 தொடக்கம் 80 பேர் வரையிலானவர்களின் பெயர்களை பரிசீலித்தே, பா.அரியநேந்திரனை தெரிவு செய்துள்ளோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியை சேர்ந்த பலரும் எமக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

கட்சியின் முடிவு ஓரிரு நாட்களில் வெளிவரும் என நம்புகிறோம். நாம் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்துப் பயணிக்கவே விரும்புகிறோம்.

எம்முடன் இணைந்து பயணிக்க விரும்புவோர் பயணிக்க முடியும். இன்னும் ஓரிரு நாட்களில் வேட்பாளருக்கான கட்டுப்பணத்தினைச் செலுத்தவுள்ளோம்" எனத் தெரிவித்தார். (ம-7,33)

## சமஷ்டியை...

செய்யப்பட்டுள்ளன.

குறித்த நடவடிக்கை நேற்று வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் குழுவினால் வடக்குக் கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு வேண்டும் என்ற கோரிக்கை இரண்டு வருடங்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்டிருந்தது.

இதனையொட்டியே, இவ்வாறு துண்டுப்பிரசுரங்கள் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசம் எங்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன. (ம-7)

## மருத்துவ...

10.30 மணி முதல் இச்சட்டமூலங்கள் குறித்த இரண்டாவது மதிப்பீடு விவாதம் நடைபெற்றதுடன், இதன்போது குறித்த சட்டமூலங்களின் முக்கியத்துவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கருத்துக்களை முன்வைத்தனர்.

விவாதம் முடிவடைந்ததும் குழு நிலையில் குறித்த சட்டமூலங்களுக்கான திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இரு சட்டமூலங்களும் விவாதம் இன்றி திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கான இரு மருத்துவம் (திருத்தச்) சட்டமூலங்களும் சுகாதார அமைச்சரினால் கடந்த ஜூலை 02 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 24 வேட்பாளர்...

இதில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 11 வேட்பாளர்களும், 12 சுயேட்சை வேட்பாளர்களும் பிற அரசியல் கட்சிகளில் இருந்து ஒரு வேட்பாளரும் என 24 வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தமது கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர். (ம-7)

## இரண்டு...

வித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றைக் காணவில்லை என அதன் உரிமையாளர் வவுனியாப் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயக்கொடி அவர்களின் வழிகாட்டலில் பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணை அடிப்படையில் மல்லாவியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் இரண்டு மோட்டார் சைக்கிள் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## பாதிக்கப்பட்ட...

பணத்தைப் பாதிக்கப்பட்டவருக்கு செலுத்த வேண்டும் என உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன் குறித்த ஆசிரியையின் அரச தொழிலுக்கு பங்கம் ஏற்படாதவகையில் 5 வருட கால ஒத்திவைக் கப்பட்ட சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு 6 காசோலைகளை வழங்கிய மோசடி குற்றச்சாட்டின் அடிப்படையில் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வந்த நிலையில் ஆசிரியை ஒருவர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டார்.

இந்நிலையில், நீதிபதி இளஞ்செழியன் அரச செலவாக 50 ஆயிரம் ரூபாயும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 37 இலட்சம் ரூபாயும் செலுத்த தவறும் பட்சத்தில் 18 மாத கால கடூழிய சிறைத் தண்டனையும் வழங்கி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதன்போது பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவர் 2006ஆம் ஆண்டு அடையாளம் தெரியாத நபர்களால் படுகொலை செய்யப்பட்டதுடன், அந்த வழக்கு நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அரச சட்டவாதி ஆறுமுகம் தனுசன் வழக்குத் தொடுத்தவர் தரப்பில் வழக்கை நெறிப்படுத்தியுள்ளார்.

ஆசிரியை, பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு 10 இலட்சம் ரூபாய் பணத்தை நீதிமன்றில் வைத்து வழங்கியுள்ளார்.

இதற்கிடையில் 3 மாத காலத்தில் மீதித் தொகையைச் செலுத்த வேண்டும் என நீதிமன்றம் கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளதுடன் பணம் செலுத்தத் தவறினால் உடனடியாக சிறைத் தண்டனை நடைமுறைப்படுத்தப்படும் எனவும் நீதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும் 14 ஆண்டுகள் ஏமாற்றியது போதும் இனியும் பணம் செலுத்தாது ஏமாற்ற முடியாது எனத் தெரிவித்து 3 மாத காலம் அவகாசம் வழங்கி நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



உத்தியோகபூர்வ முடிவுகள்
08.08.2024 வெற்றி வாரம் 267 வர்ணம் மஞ்சள்
சுப்பர் பல்
R 5 0 7 6 1 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.23,221,528.00
70029
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2533 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 08.08.2024 தினம் வியாழன்
09 19 30 75 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 50,793,487.20

சனிதா
திகதி 2024.08.08 வெற்றி வாரம் 4694 வர்ணம் சிவப்பு
06 14 25 41 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.67,825,662.00
83003

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4245 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.08.08 தினம் வியாழக்கிழமை
05 14 56 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 3,880,121.20
193038

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 32 02 04 22 74
1709
08.08.2024 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 537,859,649.00

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2359
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.57,130,079.20
21 24 42 73 D
281693


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா - 2024

திகதி - ஆகஸ்ட் 9,10,11 | இடம் - யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலையம்

**கல்வி உலகின் கலங்கரை விளக்கு**

**பூபாலசிங்கம் புத்தகசாலையின் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்**

பாடசாலைகள், மாணவர்கள், ஆசிரியர்கள், நூல் நிலையங்கள், நகர சபைகள், பிரதேச சபைகள், படைப்பாளிகள், புத்தக ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C-953)

---

உ
குருவே துணை

## ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 39ஆம் ஆண்டு குருபூசை



இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்
தொண்டைமானாறு
காலம் : 10.08.2024 சனிக்கிழமை



காலை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பூசை
வழிபாடுகளைத் தொடர்ந்து
சந்நிதியான் ஆச்சிரமத்தில்

சிறப்புரை - **'குருவாய் வருவாய்'**
(ஆசிரியர் **திரு. துரை. கணேசமூர்த்தி**) இடம்பெறவுள்ளது.

சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் அனைவரும் கலந்து குருவருளும் திருவருளும் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.
சுபம். சாந்தி.

**செல்வச்சந்நிதி,**
**தொண்டைமானாறு.**

**சந்நிதியான்**
**ஆச்சிரமம்.**

(1656)

---

## மரண அறிவித்தல்

தோற்றம்
17 - 04 - 1936



மறைவு
08 - 08 - 2024

# கந்தசாமி லீலாவதி

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி லீலாவதி அவர்கள் 08.08.2024 நேற்று வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - நல்லம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும் கனகர் - நாகமுத்து தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான ஜெயரட்ணம், கனகராஜா, தனபாலசிங்கம் மற்றும் புஸ்பமலர், பூபாலசிங்கம், தங்கசிவம் அமிர்தலிங்கம் ஆகியோரது சகோதரியும் காலஞ்சென்றவர்களான சந்திரவதி, தாயம்மா, திருப்பதி, குமார், ரத்தினம், பூரணம், அம்பிகா, நடராசா, சண்முகநாதன் மற்றும் தவமணி, பரமேஸ்வரி, இதயகேஸ்வரி, வள்ளிநாயகி, சந்திரகுமாரி, குணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் இன்பநாதன், றதி, றஞ்சி, பாமா, சாந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கோகிலா, கௌரி, மகேந்திரன், சிவயோகேஸ்வரன், ரவீந்திரன், தங்கசிவம் ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிநயா, ரிஷிகேசன், நர்மதா, லக்சியா, சகானா, ஆதவன், றஜித்தா, கோபியா, ஜிவோயனா, சிந்துஜா, தர்மேஸ்வரன், திருபரன், யமேலா, டெனிஸ்ரா, விதுசன், ஜனனி, கஜானி, தர்சனா, சிவர்சனா, றக்சனா, பிரியங்கா, வினோத், அனுசியா, தினேஸ், ராஜன், கிருபாகரன், செந்தூரன், அகிலன், றமணன், துவாரகா, வினோஜா, சுமன், றஜீவன், பிரசாத், பிரசாந்தன், சந்துரு, றமணன், பிரியங்கன், சகீர்தன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் றோவின், நயிரா, ரிசான், ஆர்நப், சவினா, யதுசன், விகாஸ், கபினா, வவினா, வவிஸ்ணா, சாய்நாஸ், சாய்கீர்த், சியாரா, சிறியா, றயன், சையிரா, தியான், தேவ், நேயா, மீரா, கார்த்தி, சபியா, சஸ்வின், றியானா, ஜேடன், அகானா, இனியா, சாக்சி, சபீனா, சயின், அய்சாறா, அய்தன், அஜானா, ஆர்த்விக், ஆதியா, ஆரியன், அமாரா, அஞ்சலி, அலிஷா, அர்ஜூன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.08.2024 இன்று வெள்ளிக் கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் வீட்டில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை உச்த்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தகவல் :*
**குடும்பத்தினர்**
**076 175 5517**

(1562)

---


## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குலத்தைச் சேர்ந்த 1988 ஆம் ஆண்டு, பூரம் நட்சத்திரம், 4 ம் பாதம், அரச உத்தியோக வேலை பார்க்கும் மணமகனிற்கு அரச உத்தியோக மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(1648)

**070 249 4018, 076 354 8549**

---

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

**074 17 37 684**

(230)

---

## கோழி முட்டை மலிவு விலையில்

1 Kg இறைச்சி 1000/=
முட்டை 35/=

நியூசிற்றி கோழிக்கடை
கோழி பாம் குருநகர் மாக்கற்
முன்பாக யாழ்ப்பாணம்.

(1658)

---

## Care Giver - பராமரிப்பாளர்

**கனடா, அமெரிக்கா, ஜேர்மனி**
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)



**CIMS College**
49A, Chapel Street, Jaffna.

(C-0952)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

---

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்

குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Online Visa Appoinments
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services
- Travel Insurance
- Travel Itinerary

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி | புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர் | யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு | சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய் | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 0768226240 0768226241

(C-0952)

---

## V2 VISA SERVICES
## கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0952)

---

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு

**aat** (Sri Lanka)
(AA1 - 10.08.2024)
(AA 2, AA 3 - 24.08.2024)
G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.

கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accounting Courses**
Business Level - I,II (10.08.2024)

வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
**DBF & HDBF (14.09.2024)**

**Certificate Course in English**

Further Details : **Jaffna College**
**Undergraduate Dept.**
**464, Hospital Road, Jaffna.**
021 222 3382/ 021 222 9149
- 077 440 5917

(C-935)

---

## வேலையாட்கள் தேவை

- முகாமையாளர்
- காசாளர்
- வடிவமைப்பாளர்

கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் ஊக்கத்தொகை

அனுபவம் உள்ளவர்கள் மற்றும் அடிப்படை கணனி அறிவு உள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்.

JAFFNA SMART
Printing (Pvt) Ltd

Contact us:
255, Stanley Road, Jaffna
2smartprint@gmail.com
Tel : 021 221 2958 | 071650 1650

(232)

---

## முழுநேர/ பகுதிநேர வேலைவாய்ப்பு

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படைத் தகைமைகள்**

- G.C.E(O/L) பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18 - 60 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

**Salary - Basic Rs 30,000/= + Commission**

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை(CV) கீழுள்ள Whatsapp இலக்கத்திற்கு அல்லது மின்னஞ்சல் (Email) முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**077 348 1282**
**yprasa@gmail.com**

(1651)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தினரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org